Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36
கதிர் : 179 | திங்கட்கிழமை | வைகாசி 09 ஆம் நாள் 24 மே 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 12 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111



## இலங்கைக்கு புயல் எச்சரிக்கை!

கொழும்பு, மே 24
வங்காள விரிகுடா கடல் பிரதேசத்தில் நிலைகொண்டிருக்கும் தாழமுக்கம் இன்று திங்கட்கிழமை புயலாக மாற்றமடையக்கூடுமென வளி 02 >

## விபத்தில் காயமடைந்த சிப்பாய் நேற்றுச் சாவு!

யாழ்ப்பாணம், மே 24
ஊரெழுப் பகுதியில் கடந்த 19ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த சிப்பாய் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார். வெலிமடுவில் உள்ள தனது வீட்டுக்கு 02 >

### வடக்கு மாகாணத்தில்
## பி.சி.ஆர். சோதனைகள் அதிகரிக்கப்படவேண்டும்
### சந்திம ஜீவந்தர தெரிவிப்பு

கொழும்பு, மே 24
வடக்கு மாகாணத்தில் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், சமூகத்தில் உள்ள தொற்றாளர்களை இனம் காண்பதற்கு அங்கு பி.சி. ஆர். சோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும் என்று சிறி ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் வாயு விஞ்ஞானப் 02 >



## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்துக்கு கொரோனா
### அவரது மனைவிக்கும் தொற்று

கொழும்பு, மே 24
எதிர்க்கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாஸவுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தகவலை தனது ருவிற்றர் பதிவில் 02 >

# வடக்கில் தடைப்பட்டது பி.சி.ஆர். பரிசோதனை!
### இரசாயனப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், மே 24
வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டு வந்த பி.சி.ஆர். சோதனைகள் நேற்று முதல் தடைப்பட்டுள்ளன. 02 >

## வடக்கிலும் சைனோஃபார்ம்

யாழ்ப்பாணம், மே 24
சீன அரசால் நன்கொடையாக வழங்கப்பட்ட சைனோஃபார்ம் தடுப்பூசிகளில் ஒரு தொகுதி வடக்கு மாகாணத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டு அவற்றை ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள் என. சுகாதார முன்களப் பணியாளர் 02 >

## எதிர்வரும் நாள்களில் சாவுகள் அதிகரிக்கும்
### இராணுவத் தளபதி எதிர்வுகூறல்



கொழும்பு, மே 24
நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரிக்கும் அதேவேளை, கொரோனா சாவுகளின் எண்ணிக்கையும் உயர்வடைகின்றது. எதிர்வரும் நாள்களில் கொரோனா சாவுகளின் எண்ணிக்கை மேலும் அதி 02 >



## கொரோனா நேற்று 2,945

யாழ்ப்பாணம், மே 24
நாட்டில் நேற்று 2 ஆயிரத்து 945 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். 02 >

## பெண்ணொருவரின் சடலம் பளைப் பகுதியில் மீட்பு!

கிளிநொச்சி, மே 24
கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பளை தம்பகாமம் இன்னாசிகுளப் பகுதியில் பெண் ஒருவர் நேற்றுச் சடலமாக 02 >

## வடக்கில் தொற்று 92

யாழ்ப்பாணம், மே 24
வடக்கு மாகாணத்தில் நேற்று 92 பேருக்குக் கொரோhத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணத்தில் 61 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதன்படி, சாவகச்சேரி பொதுச்சுகாதா 02 >

## பயணத்தடையின்போது ஆலயங்களில் திருட்டு!

கொடிகாமம், மே 24
பயணத்தடை அமுலில் உள்ள வேளை நாவற்குழி கோவிலாக்கண்டி பகுதியில் உள்ள இரு ஆலயங்க 02 >

## வலைஞர்மடம் பகுதியில் கைக்குண்டுகள் மீட்பு!

முல்லைத்தீவு, மே 24
முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வலைஞர்மடம் பகுதியில் கைக்குண்டுகள் சில மீட்கப்பட்டுள்ளன. அவற்றுடன் ஜெக்கெட் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. வலைஞர்மடம் பகுதியில் உள்ள பற்றைக் காடு ஒன்றுக்குள் கைவி 02 >

## இந்திய வைரஸ் வடக்கில் இல்லை
### சிறி ஜெயவர்த்தனபுர மருத்துவ நிபுணர் தெரிவிப்பு

கொழும்பு, மே 24
வடக்கு மாகாணத்தில் இந்தியாவிலிருந்து வந்த தொற்றாளர்களிடம் மாதிரிகள் பெறப்பட்டபோதும் இதுவரை இந்தியாவின் திரிபு வைரஸ் கண்டறியப்படவில்லை. ஆனால் இலங்கையில் காணப்படும் பல்வேறு திரிபு வைரஸ் வடக்கில் கண் 02 >

## 131 கிலோ கேரளக் கஞ்சா தொண்டமனாறில் மீட்பு!

வடமராட்சி, மே 24
வடமராட்சி, தொண்டமானாறு கடலோரப் பகுதியில்கைவிடப்பட்ட 131கிலோ 800 கிராம் கேரளக் கஞ்சா மீட் 02 >

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்....

பி.சி.ஆர். சோதனைக்குரிய உபகரணங்கள் மற்றும் இரசாயனங்கள் ஆகியவை இல்லாமையால் அவை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த மாத இறுதியிலிருந்து பி.சி.ஆர். பரிசோதனைகள் அதிகரிக்கப்பட்டிருந்தன. அதற்குரிய உபகரணங்கள் மற்றும் பி.சி.ஆர். இயந்திரத்துக்குரிய இரசாயனங்கள் என்பவை கிடைக்கப்பெறுவதில் சிக்கல் நிலைமைகள் காணப்பட்டன. எக்ஸ்ரக்ஸன் ரீஜெண்ட்ஸ் () எனப்படும் இரசாயனப் பொருளுக்கே தட்டுப்பாடு நிலவுவதால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்திலும் 3 நாள்களுக்கு சமூகமட்டத்திலான பி.சி. ஆர். மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சமூக மட்டத்திலான பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளாமல், அவசர தேவை கருதிய பி.சி.ஆர். சோதனைகளை மட்டும் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதால், யாழ்ப்பாணத்தில் கொரோனா சமூகத் தொற்று அடைந்து செல்லக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட பி.சி.ஆர். மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்படாமல் தேங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-ஓ.5)

## பி.சி.ஆர்....

பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சந்திம ஜீவந்ரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேல் மாகாணத்தைப் போன்று வடக்கு மாகாணத்திலும் மக்கள் அதிகம் செறிந்து வாழ்கின்றார்கள். வடக்கில் சில இடங்களில் கொரோனாக் கொத்தணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. பழைய கொத்தணிகளும் உள்ளன. புதிய கொத்தணிகளும் உள்ளன. எனவே, மேல் மாகாணத்தைப் போன்று வடக்கு மாகாணத்திலும் பி.சி.ஆர். பரிசோதனைகளை நாள்தோறும் அதிகரிக்க வேண்டும். அப்போதுதான் சமூகத்தில் இருக்கும் தொற்றாளர்களை விரைவில் அடையாளம் காணமுடியும்.

நாட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். அதன்பின்னர்தான் குறித்த பகுதிகளைத் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்க வேண்டும். ஆனால், நாட்டின் தற்போதைய இறுக்கமான நிலைமையில் இது எந்தளவுக்குச் சாத்தியமாகும் என்று எமக்குத் தெரியாது என்றார். (ம-ஓ.5,22)

## இலங்கைக்கு...

மண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதன் காரணமாக எதிர்வரும் சில தினங்களுக்கு வடக்கு அந்தமான் கடல் பிரதேசத்திலும், வடமேற்கு வங்காள விரிகுடா கடல் பிரதேசத்திலும் கடல் திடீரென கொந்தளிப்புடன் காணப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, இடியுடன் கூடிய மழையும் பெய்யக்கூடும் என்பதுடன் 70 தொடக்கம் 80 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடுமென்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக வங்காள விரிகுடாவின் கிழக்கு மத்திய பகுதியிலும் அதனையடுத்து நாட்டைச் சூழவுள்ள கடல்பிரதேசத்திலும் இன்று முதல் மறு அறிவித்தல் வரை மீன்பிடி மற்றும் கடல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ம)

## எதிர்க்கட்சி...

அவர் வெளிப்படுத்தியுள்ளார். எனது மனைவிக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர். சோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் நானும் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டேன். அதில் எனக்கும் தொற்று உறுதியானது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சஜித் பிரேமதாஸ, கொழும்பில் சீனாவால் அமைக்கப்படும் துறைமுக நகரத் திட்டம் தொடர்பான நாடாளுமன்ற விவாதங்களில் முழுமையாகப் பங்கேற்றிருந்தார். அத்துடன், குறித்த திட்டத்துக்கு எதிராக நாடாளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்புப் போராட்டத்திலும் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-22)

## விபத்தில்....

விடுமுறைக்காகச் சென்ற குணசேகர (வயது 33) என்ற அந்தச் சிப்பாய் கடந்த 19ஆம் திகதி விபத்தில் காயமடைந்தார். அவர் பயணித்த பேருந்து ஊரெழுவில் சென்றுகொண்டிருந்த போது பேருந்துக்குக் குறுக்காக நாயொன்று சென்றதை அடுத்து பேருந்தின் செலுத்துநர் சடுதியாக பேருந்தை நிறுத்தினார். பேருந்தின் முன்பக்க ஆசனத்தில் அமர்ந்திருந்த குறித்த சிப்பாய் நிலைதடுமாறி வீதியில் விழுந்து காயமடைந்தார்.

அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட போதும் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். (ம-26)

## எதிர்வரும்...

கரிக்கக்கூடும். இவ்வாறு இராணுவத் தளபதியும் கொரோனாக் கட்டுப்பாட்டு செயலணியின் தலைவருமான சவேந்திர சில்வா தெரிவித்தார்.

'ஒவ்வொருவரும் கொரோனாத் தடுப்பு சுகாதார விதிமுறைகளை அனைத்து சந்தர்ப்பங்களிலும் உரியவாறு கடைப்பிடிக்க வேண்டும். பயணக் கட்டுப்பாடு நடைமுறையில் இருக்கும் நேரங்களில் மக்கள் அனைவரும் வீடுகளில் இருக்க வேண்டும். மக்களின் பாதுகாப்பு அவர்களின் கைகளில்தான் தங்கியுள்ளது. கட்டுமீறிப் போன கொரோனாவைக் கட்டுப்படுத்த வேண்டுமெனில் அது மக்களின் நடவடிக்கைகளில்தான் தங்கியுள்ளது' என்றார் சவேந்திர சில்வா. அமெரிக்கப் பல்கலைக் கழகமொன்றின் ஆய்வறிக்கையொன்று அண்மையில் வெளிவந்தது. அதில், இலங்கையில் ஜுன் மாதத்தில் இருந்து தொற்றுக்களும் சாவுகளும் அதிகரிக்கும் என்று குறிப்பிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-ஓ.5,22)

## வடக்கிலும்...

களுக்கு கடந்த ஜனவரி மாத இறுதியில் கொவிஷீல்ட் தடுப்பூசி ஏற்றப்பட்டது. அவர்களுக்கு இரண்டாவது டோஸ் ஏற்றும் பணிகள் வடக்கில் தற்போதும் நடைபெறுகின்றன.

இந்த நிலையில் கொவிஷீல்ட் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு சீனாவின் சைனோஃபார்ம் தடுப்பூசிகள் முதலாவது டோஸாக வழங்கப்பட்டு வருகின்றன. (மஓ.5)

## பெண்ணொருவரின்...

மீட்கப்பட்டார். தம்பகாமம் பகுதியைச் சேர்ந்த பொன்னையா வனஜா (வயது 47) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த பெண் நேற்றுமுன்தினம் காணாமல் போன நிலையில் உறவினர்கள் அவரைத்தேடி பல இடங்களிலும் அலைந்துள்ளனர். இந்த நிலையில் நேற்றுக் காலை குறித்த பெண்ணின்

இனங்காணப்பட்டுள்ளது. இது தொடர்பில் பளை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் மக்களின் உதவியுடன் சடலத்தை மீட்டனர்.

சடலம், திடீர் மரண விசாரணை அதிகாரி மற்றும் நீதிபதி ஆகியோர் பார்வையிட்டு விசாரணைகள் நிறைவடைந்த பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனை மற்றும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று பளை பொலிஸார் தெரிவித்தனர். (ப-6,214)

## பயணத் தடையின்...

ளில் நான்கு லட்சத்துக்கும், அதிகமான பொருள்கள் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளன.

கோவிலாக்கண்டி நாச்சிமார் கோவில் மற்றும் அருகிலுள்ள பிள்ளையார் ஆலயம் ஆகிய கோவில்களிலேயே மேற்படி திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன. ஆலயத்தின் கதவுகள் உடைக்கப்பட்டிருப்பதை நேற்றுமுன்தினம் அவதானித்த கிராம மக்கள் ஆலய நிர்வாகத்தினருக்கு அறிவித்துள்ளனர்.

இதையடுத்து ஆலய நிர்வாகத்தினர் சென்று பார்த்தபோது இரு ஆலயங்களினதும் கதவுகளும், மடப்பள்ளிகளும் உடைக்கப்பட்டு அங்கிருந்த மின்மோட்டர் உள்ளிட்ட நான்கு லட்சத்துக்கும் அதிகமான பெறுமதியுடைய பொருள்களை திருடிச் சென்றுள்ளனர். இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸில் முறையிடப்பட்டது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-159)

## 131 கிலோ...

கப்பட்டுள்ளது.

கடற்படையினர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடத்திய சிறப்பு ரோந்துப் பணியின்போதே இந்தக் கஞ்சா மீட்கப் பட்டுள்ளது.

4 பொதிகளில் பொதியிடப்பட்ட நிலையில் கஞ்சா மீட்கப்பட் டுள்ளது. கோவிட் 19 பரவுவதைத் தடுப்பதற்கான சுகாதார நடவடிக்கைகளுக்கு ஏற்ப மீட்கப்பட்ட கேரள கஞ்சாவை தீயிட்டு அழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ப-26)

## இந்திய வைரஸ்...

ளர் விசேட மருத்துவ நிபுணர் சந்திம ஜீவந்ரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் அடையாளம் காணப்பட்டிருந்த கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் பலரின் மாதிரிகள் எம்மால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது டென்மார்க், ஐரோப்பிய நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் ஆகியவற்றில் பரவும் வைரஸ் சிலருக்கு இனங்காணப்பட்டது.

யாழ். மாவட்டம், நல்லூர் பிரதேசத்திலேயே மேற்படி வைரஸ் பரவல் இனங்காணப்பட்டது. அதேவேளை, பிரிட்டனில் பரவும் வைரஸ் மன்னார் நகரப் பகுதியில் சிலருக்கு இனங்காணப்பட்டது. இந்தியாவில் வேகமாகப் பரவிவரும் புதிய வகை வைரஸ் தொற்றுடன் வடக்கில் இதுவரை எவரும் அடையாளம் காணப்படவில்லை.

வடக்கில் நாள்தோறும் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். அவர்களில் பலர் இலங்கையில் திரிபடைந்த வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார். (ஓ.5,22)

## கொரோனா...

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 64 ஆயிரத்து 187ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 34 ஆயிரத்து 402ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 607ஆக அதிகரித்துள்ளது. (ம-22)

## வடக்கில்...

ரப் பரிசோதகர் பிரிவில் 19 பேருக்கும், யாழ் மாநகர சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் 4 பேருக்கும், அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் 4 பேருக்கும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 3 பேருக்கும், அளவெட்டி பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும், ஊர்காவற்றுறை பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும், தனியார் நிறுவன மொன்றில் ஒருவருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 13 பேருக்கும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 3 பேருக்கும், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 3 பேருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 9 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு வெளியே 31 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதன்படி, ஒட்டுசுட்டான் சுகாதார வைத்திய அதிகாரி 2 பேருக்கும், வவுனியாவில் 6 பேருக்கும்,

புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் 2 பேருக்கும், முழங்காவில் பிரதேச மருத்துவமனையில் 4 பேருக்கும், மன்னார் மாவட்ட மருத்துவமனையில் ஒருவருக்கும், அக்கராயன் பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும், தருமபுரம் பிரதேச மருத்துவ மனையில் ஒருவருக்கும், வவுனியா மாவட்ட மருத்துவனையில் ஒருவருக்கும், புளியங்குளத்தில் ஒருவருக்கும், பளையில் ஒருவருக்கும், முல்லைத் தீவு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேருக்கும், கரைச்சியில் 9 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ம-ஓ5)

## வலைஞர்மடம்...

டப்பட்ட நிலையில் கைக்குண்டுகள் இருப்பது தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, அவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய மேற்படி பொருள்களை மீட்டுள்ளனர். (ம-19)

## பருத்தித்துறைப் பகுதியில் நேற்று சமுர்த்தி அலுவலருக்குத் தொற்று

யாழ்ப்பாணம், மே 24

பருத்தித்துறையில் சமுர்த்தி அலுவலர் ஒருவர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்று அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதேவேளை நெல்லியடி நகரில் உள்ள வெதுப்பகம் ஒன்றில் பணியாற்றிய ஒருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து அந்த வெதுப்பகம் தற்காலிகமாக மூடப் பட்டுள்ளது. (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் தினமும் தொற்றாளர்கள் அதிகரிப்பு

## மாவட்டச் செயலர் எச்சரிக்கை

**கிளிநொச்சி, மே 24**
**கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 452 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்தோடு நாளுக்கு நாள் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. எனவே மக்கள் அதிக பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும்.**

இவ்வாறு கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;
கிளிநொச்சி மாவட்டத்தில் மொத்தமாக 452 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 400 பேர் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 52 பேர் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.
இதேவேளை நேற்றுமுன்தினம் சனிக் கிழமை 36 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். கரைச்சி மருத்துவ அதிகாரி பிரிவில் 24 பேரும், பளையில் ஒருவரும், பூநகரியில் மூவரும், கண்டாவளையில் எட்டுப் பேரும் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்தோடு ஆயிரத்து 160 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இதேவேளை இரண்டு இறப்புக்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளன. மாவட்டத்தில் நாளுக்கு நாள் தொற்றாளர்கள் அதிகரித்து வருகின்றனர். எனவே மக்கள் அதிகம் விழிப்புணர்வுடனும், அவதானத்துடனும் நடந்துகொள்ள வேண்டும். சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றிச் செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றார். (ப-214)



# மதுப்போத்தல்களை எறிந்து இளைஞர் குழு அட்டகாசம்

## மக்கள் விசனம்

வவுனியா,மே 24
வவுனியா திருநாவற்குளம் பகுதியில் இளைஞர் குழு ஒன்று மதுபானப் போத்தல்களால் வீடு ஒன்றின் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளது.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.
திருநாவற்குளம் பகுதியில் வீதியில் அமர்ந்து மது அருந்திக் கொண்டிருந்த இளைஞர் குழு ஒன்று மது போதையில் அங்கிருந்த வீடு ஒன்றின் மீது மதுப் போத்தல்களை எடுத்து வீசி வீட்டின்மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளது.
இது தொடர்பில் வவுனியா பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
அரசால் நாடாளாவிய ரீதியில் பயணக் கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், குறித்த பகுதியில் சட்டவிரோத மது விற்பனை அதிகரித்துள்ளதால் இவ்வாறான சில இளைஞர்கள் மதுபோதையில் தொடர்ந்தும் பல சட்டவிரோதச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர் என்றும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ப-110)



# வவுனியா நகரசபையால் தொற்று நீக்கும் செயற்பாடு

வவுனியா,மே 24
நாடளாவிய ரீதியில் கொரோனாத் தொற்றின் தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில், வவுனியா நகரசபையினரால் தொற்று நீக்கும் செயற்பாடுகள் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வவுனியா நகரசபை தவிசாளரின் ஆலோசனைக்கமைய நகரசபை பொது முகாமைத்துவ உதவியாளர் துரைராஜ் சபேசன் தலைமையில் வவுனியா நகரின் முக்கிய பகுதிகளில் நேற்று தொற்று நீக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.
பழைய பஸ் நிலையம் , எரிபொருள் நிரப்பு நிலையங்கள் , நகர வர்த்தக நிலைய முன்றல் மற்றும் நடைபாதைகள் ஆகியவை தொற்று நீக்கம் செய்யப்பட்டன. (ஜ-18)

# அல்வாயில் குடும்பத்தலைவர் கொலை; தலைமறைவான சந்தேகநபர்கள் மூவர் பொலிஸாரால் நேற்று கைது

பருத்தித்துறை, மே 24
அல்வாயில் வாள்வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்த குடும்பத்தலைவரின் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த இரண்டு பெண்கள் உட்பட மூவர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
சந்தேக நபர்கள் மூவரும் தலைமறைவாகி வசாவிளான் பாடசாலைக்கு அண்மையில் வசித்து வந்த நிலையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.
அல்வாயில் கடந்த ஏப்ரல் 20 ஆம் திகதி இரு பகுதியினருக்கு இடையே இடம்பெற்ற மோதலில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான முருகராசா கௌசிகன் (வயது -31) என்பவர் வாள் வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.
சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 6 பேர் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர். சிகிச்சை பெற்றவர்களில் இருவர் வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டனர் என்றும், மேலும் இருவர் கொல்லப்பட்டவருடன் மோதலில் ஈடுபட்டவர்கள் எனவும் பருத்தித்துறை பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டு, மறுநாளான ஏப்ரல் 21ஆம் திகதி அவர்களைக் கைதுசெய்தனர்.
அத்துடன் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூவர் தலைமறைவாகியுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவு வழங்கிய தகவலின் அடிப்படையில் தலைமறைவாகியிருந்த மூவரும் வசாவிளான் பகுதியில் வைத்து நேற்று கைதுசெய்யப்பட்டனர். 20 மற்றும் 50 வயதுடைய பெண்கள் இருவரும் 56 வயதுடைய ஆண் ஒருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களாவர். (ப-26)



கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் நேற்று வழங்கப்பட்டன. (ஜ-113)

# தனிமையிலுள்ளோருக்கு உலர் உணவுப் பொதிகள்

வலி.தென்மேற்கு, மே 24
புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு கிராம அலுவலர் பிரிவில் தனிமைப்படுத்தலில் உள்ள சுமார் 130 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நேற்று வழங்கப்பட்டன.
மல்லிகைத்தீவு கிராம அலுவலர் பிரிவில் இயங்கிவரும் 'ஆபேல் இயற்கை பண்ணை'நிறுவனத்தால் இந்த உதவிகள் வமங்கப்பட்டன. (ஜ-115)

# யாழ்ப்பாணத்தில் 11 மாத குழந்தைக்கும் தொற்று

யாழ்ப்பாணம், மே 24
யாழ்ப்பாணத்தில் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 11 மாதக் குழந்தை கொரோனாத் தொற்றுடன் நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்டுள்ளது.
கொரோனாவின் மூன்றாவது அலையில் சிறுவர்களும் அதிகளவில் பாதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீசாலை பகுதியைச் சேர்ந்த கணவன்,மனைவிக்கு கொவிட்

சாவகச்சேரி,மே 24
மீசாலை பகுதியைச் சேர்ந்த கணவன் மற்றும் மனைவிக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாண நகரில் வர்த்தக நிலையம் நடத்தும் வர்த்தகரும், மனைவியும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெறச் சென்ற வேளையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் இருவருக்

# பயணக் கட்டுப்பாடு நீக்கப்பட்டாலும் தேவையற்ற பயணங்களை தவிர்க்கவும்

கொழும்பு,மே 24

**பயணக் கட்டுப்பாடு நீக்கப்பட்டதன் பின்னர், தேவையற்ற பயணங்கள் எதனையும் மேற்கொள்ள வேண்டாம் என்று கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.**



இலங்கையில் தற்போது அமுலில் உள்ள பயணக் கட்டுப்பாடு நாளை 25ஆம் திகதி அதிகாலை 4 மணிமுதல் நீக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் உணவு மற்றும் மருந்துப் பொருள்களை கொள்வனவு செய்ய அருகிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு மாத்திரமே பொதுமக்கள் செல்ல வேண்டும் என்று அந்த நிலையத்தின் பிரதானி இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார். பயணக்கட்டுப்பாடு தளர்த்தப்படும் காலப்பகுதியினுள் உணவுப்பொருள் விற்பனை நிலையம், மருந்தகம் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையம் போன்ற அத்தியாவசிய விற்பனை நிலையங்கள் மாத்திரமே திறக்க அனுமதி வழங்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ-இ)

# மின்சார சபை ஊழியர்கள் போராட்டத்துக்குத் தயார்

கொழும்பு, மே 24

இலங்கை மின்சார சபை ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படா விட்டால் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று இலங்கை மின்சார சபையின் 16 தொழிற்சங்கங்கள் இணைந்து அறிவித்துள்ளன.

மின்சார சபையின் ஊழியர்களுக்குத் தடுப்பூசி செலுத்துதல், மருத்துவ உதவி நடைமுறை, ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் ஊழியர்களை நம்பி வாழும் நபர்கள் ஆகியோருக்கு இழப்பீடுகளை வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளை தொழிற்சங்கங்கள் முன்வைத்துள்ளன. (எ-4)

# கட்டணம் செலுத்தும் சிகிச்சைக்கு அசாத் சாலியை மாற்றமுடியும்

## உயர்நீதிமன்று அனுமதி

கொழும்பு, மே 24

மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி, கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நிலையில், அவரை தற்போதைய சூழலில் சுகாதாரத் துறையின் அனுமதியுடன் கட்டணம் செலுத்தும் சிகிச்சைப் பிரிவொன்றுக்கு மாற்ற முடியும் என்று உயர் நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளது.

கைது மற்றும் தடுத்து வைத்தலுக்கு எதிராக உயர்நீதிமன்றில் அசாத் சாலி சார்பில் தன்னையே மனுதாரராகப் பெயரிட்டு, சிரேஸ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசா தாக்கல் செய்துள்ள எஸ்.சி.எப்.ஆர். 97/2021 எனும் அடிப்படை உரிமை மீறல் மனு நேற்றுமுன்தினம் பரிசீலிக்கப்பட்டபோதே, மனுதாரர் சார்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று இந்த அனுமதியை உயர் நீதிமன்றம் வழங்கியது.

இதன்போது, கடந்த தவணை அசாத் சாலி விவகார விசாரணைகளை நிறைவு செய்ய 3 வாரங்கள் கால அவகாசத்தை சட்ட மா அதிபர் சார்பில் முற்படும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் கோரியிருந்தார். அதனடிப்படையில், அந்த விசாரணைகள் இன்னும் முடியடையவில்லை என்று அவர் நேற்றுமுன்தினம் மன்றுக்கு அறிவித்தார். இதன்போது அசாத் சாலி சார்பில் சிரேஷ்ட் சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவின் ஆலோசனைக்கு அமைய ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி என்.எம். சஹீட் சட்டத்தரணிகளான தர்மஜா தர்மராஜா, சந்திரகே பிருந்தா ஆகியோர் முற்பட்டனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா வாதங்களை முன் வைத்ததுடன் கடந்த 18 ஆம் திகதி தாக்கல்செய்த நகர்த்தல் பத்திரத்தையும் அடிப்படையாகக் கொண்டு விடயங்களைத் தெளிவுபடுத்தினார். கடந்த 16 ஆம் திகதி அசாத்சாலி சுகவீனம் காரணமாக தேசிய மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தார் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டதன் பின்னர் தற்போது அவர் சாதாரண சிகிச்சை அறைக்கு மாற்றப்பட்டு, தற்போதும் சிகிச்சை பெற்றுவருகின்றார் என்றும் கூறினார்.

எனினும், தற்போது நாட்டில் நிலவும் கொவிட் தொற்றுடன் கூடிய சூழலில் அசாத் சாலியை உடனடியாக கட்டணம் செலுத்தும் சிகிச்சை பெற அனுமதிக்கப்படல் வேண்டும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா வாதிட்டார். இதன்போது சட்ட மா அதிபர் சார்பில் முற்பட்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அசாத் சாலிக்கு முடியுமான அனைத்து மருத்துவ உதவிகளும் வழங்கப்பட்டன என்று கூறினார். இதன்போது பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸிடம் திறந்த மன்றில் கேள்வி எழுப்பிய மூவர் கொண்ட நீதியரசர்கள் குழுவில் ஒருவரான எஸ். துரைராஜா, நாட்டில் நிலவும் தற்போதைய சூழலில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பில் வைத்து மாரடைப்புக்கு உள்ளாகியுள்ள இந்த வழக்கின் கைதிக்கு சிகிச்சையளிக்கும் வசதி உள்ளதா என வினவினார். அதற்கு பதிலளித்த பிரதி சொலிசிட்டர் ஜெனரால் திலீப பீரிஸ் அவ்வாறான வசதிகள் இல்லை என்று குறிப்பிட்டார்.

எனினும், ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபாவின் கோரிக்கையில் தனக்கு ஆட்சேபனை இல்லை எனவும், கட்டணம் செலுத்தும் சிகிச்சைப் பிரிவுக்கு தடுப்புக் காவல் கைதியை மாற்றுவதாக இருந்தால் சுகாதாரத் துறையினரின் அனுமதியுடன் அது இடம்பெறல் வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதனையடுத்து, சுகாதார அதிகாரிகளின் அனுமதியுடன் அசாத் சாலியை கட்டணம் செலுத்தும் சிகிச்சைப் பிரிவொன்றில் சேர்க்க உயர்நீதிமன்று அனுமதியளித்தது. அத்துடன் இந்த விவகார வழக்கை அவசர நிலை வழக்காகக் கருதி மீள ஜூன் 2 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுக்கவும் உயர்நீதிமன்றம் தீர்மா

# போக்குவரத்தை கண்காணிக்க புதிய செயலி

கொழும்பு, மே 24

போக்குவரத்து விதி மீறல்களைக் கண்காணிப்பதற்கு புதிய செயலியொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கையடக்கத் தொலைபேசிக்கான இந்தச் செயலியை பொலிஸார் அறிமுகப்படுத்தியுள்ளனர். ஈட்ரவிக் (etraffic) என்ற செயலியை அன்ரொய்ட் பயனர்கள் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அன்றாடம் சந்திக்கும் போக்குவரத்து விதி மீறல் தொடர்பான காணொலி மற்றும் புகைப்படங்களைப் பதிவுசெய்து, நேரடியாக பொலிஸாரிடம் பகிர்ந்து கொள்ள முடியும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-4)



# வெலிக்கடை சிறைக்காணி நீண்டகாலக் குத்தகைக்கு

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மே 24

வெலிக்கடை சிறைச்சாலைக் காணியை, நீண்ட கால குத்தகைக்கு வழங்கும் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நகர அபிவிருத்தித் திட்டத்துக்கான இந்த முன்மொழிவை பிரதமர் மஹிந்த ராஜபக்ச சமர்ப்பித்துள்ளார். இந்தத் திட்டத்தின்படி, தெரிவுசெய்யப்பட்ட உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வெலிக்கடைச் சிறைச்சாலைக் காணி குத்தகைக்கு விடப்படும். அதேவேளை வெலிக்கடை சிறைச்சாலை ஹொரன- மில்லேவப் பகுதிக்கு மாற்றப்படவுள்ளது.

ஹொரன- மில்லேவ பகுதியில் உள்ள 200 ஏக்கர் காணியின் ஒரு பகுதியில் (42 ஏக்கரில்) வெலிக்கடை சிறைச்சாலை மீண்டும் அமைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# இந்திய மீனவர்களை நாட்டுக்குள் அழைத்துவந்தால் சட்டம் பாயும்

## முருங்கன் பொலிஸார் எச்சரிக்கை

மன்னார், மே 24

இந்திய மீனவர்களோடு தொடர்புகளை வைத்திருப்பவர்கள் மீதும் அவர்களை நாட்டுக்குள் அழைத்துவருபவர்கள் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று முருங்கன் பொலிஸார் நேற்று அறிவித்தனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

கொரோனா வைரஸ் மூன்றாவது அலையில் இருந்து பொதுமக்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக விதிக்கப்பட்ட பயணத் தடையை உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டும். வீட்டில் இருந்தாலும் சுகாதார நடைமுறைகளைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

எக்காரணம் கொண்டும் வீட்டை விட்டு வெளியில் வர வேண்டாம். முக்கியமாக வெளி மாவட்டத்தில் இருந்து யாரேனும் வந்திருந்தால் உடனடியாக பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது சுகாதாரத் துறையினருக்கோ அறிவிக்க வேண்டும். கட்டாயமாக மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் இந்திய மீனவர்களுடன் எவ்விதத்திலும் தொடர்புவைத்துக்கொள்ளக்கூடாது. அவர்களை இந்த நாட்டுக்குள் அழைத்து வரவும் கூடாது. அவ்வாறு தொடர்புகளைப் பேணிஅழைத்து வருபவர்கள் மீது கடுமையான சட்ட நட

# பூசை வழிபாட்டில் ஈடுபட்ட பூசகர் உள்ளிட்ட மூவர் கைது

கொடிகாமம், மே 24

வரணி வடக்கு பகுதியில் இடம்பெற்ற பூஜை வழிபாட்டில் கலந்து கொண்ட பூசகர் உள்ளிட்ட ஆலய நிர்வாகத்தினர் கொடிகாமம் பொலிஸாரால் கைதுசெய்யட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

வரணி வடக்கு பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் கிராம மக்கள் ஒன்று கூடி பூசை நிகழ்வு ஒன்று இடம் பெறுகிறது எனக் கிடைத்த தகவலையடுத்து, அங்கு சென்ற கொடிகாமம் பொலிஸார் ஆலயத்தின் பூசகர் உள்ளிட்ட மூவரை கைது செய்தனர். மூவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான தவணையிடப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பேராபத்தில் வடபகுதி

நான்கு பக்கமும் கொரோனாவால் சூழப்பட்ட இந்தத் தீவு நாளுக்கு நாள் மிகையான ஆபத்துக்குள் தள்ளப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. எங்கோ ஒரு மூலையில் அவதானிக்கப்பட்ட தொற்றாளர்கள் இன்று எம் படலைக்கு அருகில் அவதானிக்கப்படுகின்றனர். நாம் பெயர்சொல்லி அறிந்தவர்கள் இந்தப் பெருந்தொற்றுக்கு உட்படுவதை எம் கண்முன் காண்கின்றோம். நிலைமை இவ்வாறிருக்க இதைவிடப் பேராபத்துக்குள் ஒட்டமொத்த நாடும் குறிப்பாக வடக்கு மாகாணமும் செல்லப்போகின்றமை தெட்டத் தெளிவாகின்றது.

வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்று அதிகரித்து வருகின்றது. சமூகத்தில் உள்ள தொற்றாளர்களை இனம் காண்பதற்கு அங்கு பி.சி.ஆர். சோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும் என்று சிறி ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் வாயு விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ள நிலையில், இருந்ததையும் இழந்த கதையாகிப் போயுள்ளது வடக்கின் கதி.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவபீடம் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டு வந்த பி.சி.ஆர். சோதனைகள் நேற்று முதல் தடைப்பட்டுள்ளன. பி.சி.ஆர். சோதனைக்குரிய உபகரணங்கள் மற்றும் இரசாயனங்கள் ஆகியவை இல்லாமையால் இந்தப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. துரித தேவை கருதிய பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருப்பினும் சமூகத் தொற்றுக்களை இனங்காண்பதற்குரிய சோதனைகள் தடைப்படும் என்பது உறுதியாகியுள்ளது.

வடமாகாணத்தில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். சோதனைகளுக்கான முடிவுகள் உடனடியாக வெளியிடப்படாமல் தாமதப்படுத்தப்படுகின்றன. இந்தத் தாமதத்தால் தொற்றாளர்களை அடையாளப்படுத்தவும், அவர்களைத் தனிமைப்படுத்தி மேற்கொண்டு தொற்றுப் பரவாமல் இருக்க நடவடிக்கைகள் எடுக்கவும் கடினமாகவுள்ளது என்று பலமுறை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதேநேரம் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாதிரிகளுக்கான பி.சி.ஆர். முடிவுகள் இன்னமும் வந்துசேரவில்லை. இந்த நிலையில், பேரிடியாக இறங்கியுள்ளது மேற்படி செய்தி.

அண்மைய நாள்களாக வடமாகாணத்தில் சமூகத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவது அனைவரும் அறிந்ததே. எழுமாற்றுப் பரிசோதனைகளில் பல தொற்றாளர்கள் இங்கு அடையாளப்படுத்தப்பட்டனர். அவ்வாறிருக்கையில், பி.சி.ஆர் சோதனைகளை மேற்கொள்ளத் தேவையான உபகரணங்கள் மற்றும் இரசாயனங்கள் ஆகியவை கிடைக்கும் வரையில் இந்த சமூக மட்டச் சோதனைகள் நடத்தப்பட முடியாமல் போகப்போகின்றன. இது அடையாளம் காணப்படக்கூடிய ஏதுநிலையில் இருக்கும் சமூகத் தொற்றுக்கூட அடையாளம் காணப்படாமல் பல்கிப்பெருகி ஆழ வேரூன்றவும் காரணமாக அமையப்போகின்றது.

கொரோனாவுக்கு எதிரான பெரும்போர் என்று தன் நடவடிக்கைகளை தம்பட்டம்போடும் அரசு, உரிய உபகரணங்களின்றி இந்தப் போரில் களம்கண்டமையை என்னவென்று சொல்வது. கத்தி எம் ஒவ்வொருவரதும் தலைக்குமேல் தொங்கிக்கொண்டிருக்கின்றது. எமது பாதுகாப்புக்கு நாமே பொறுப்பாளிகள். பயணத் தடைகளை சரிவரக் கடைப்பிடிப்பதன்மூலம் இந்தப் பெருந்தொற்றில் இருந்து ஓரளவேனும் எம்மைத் தற்காத்துக்கொள்ள முன்வருவோம்.




# ஆண்டிறுதிக்குள் 30 மில்லியன் தடுப்பூசிகள் இலங்கை வரும்!!

**கொழும்பு, மே 24**




**இலங்கையின் மொத்த சனத்தொகையில் அரைவாசிப்பேருக்கு இந்த ஆண்டிறுதிக்குள் தடுப்பூசி ஏற்றப்படும். எதிர்வரும் 6 மாதங்களுக்கு 30 மில்லியன் தடுப்பூசிகள் இலங்கையை வந்தடையும் என்று இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.**

5 மில்லியன் பைசர் தடுப்பூசி, 13 மில்லியன் ஸ்புட்னிக்வி தடுப்பூசி, 14 மில்லியன் சைனோஃபார்ம் தடுப்பூசி என்பவை இந்த ஆண்டிறுதிக்குள் இலங்கைக்கு கிடைக்கப்பெறும்.
'இந்த வார இறுதிக்குள் ஒரு லட்சத்து 85 ஆயிரத்து ஸ்புட்னிக் வி தடுப்பூசியும், 5 லட்சம் சைனோஃபார்ம் தடுப்பூசியும் இலங்கைக்கு கிடைக்கும்' என்று இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் பொதுமுகாமையாளர் தசாநாயக்க குறிப்பிட்டார்.
இதேவேளை அஸ்ரா ஜெனகா கொவிஷீல்ட் தடுப்பூசியின் முதலாவது டோஸைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு இரண்டாவது டோஸை ஏற்றுவதற்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை நிவர்த்திசெய்வதற்கு அமெரிக்கா மற்றும் பிரிட்டன் உதவ முன் வந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.
(ஒ.5,இ)

## மேல் மாகாணத்தை வாட்டும் கொரோனாவும், டெங்கும்!

கொரோனாத் தொற்றாளர்கள் அதிகளவு கண்டறியப்பட்டுள்ள மேல் மாகாணத்திலேயே, டெங்கு நோயால் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது.
7 ஆயிரத்து 535 பேர் இந்த ஆண்டு டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 28.2 வீதமானவர்கள் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்.
2020ஆம் ஆண்டு டெங்கால் 31 ஆயிரத்து 162 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர்.
'இந்த ஆண்டு கண்டறியப்பட்ட 7 ஆயிரத்து 535 பேரில், 628 பேர் இந்த மாதம் கண்டறியப்பட்டவர்கள். அவர்களில் 204 பேர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்' என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் அருணா ஜெயசேகர குறிப்பிட்டார்.
நாட்டில் குறிப்பாக மேல் மாகாணத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக டெங்கு நோய்ப் பரவல் தீவிரமடைந்துள்ளது. மேல் மாகாணத்தில் கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் சுகாதாரப் பகுதியினர் கவனம் செலுத்தியுள்ள நிலையில் டெங்கு மற்றொரு பேராபத்தாக உருவெடுத்துள்ளது. (ஒ.5,இ)

*உக்ரேன் பயணிகளை அழைத்து வந்தமைக்காக*

# பஸில், உதயங்கவுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்கு

கொழும்பு, மே 24
இலங்கையில் கொரோனா தீவிரமடைவதற்கு காரணமானவர்கள் எனத் தெரிவித்து ஜனாதிபதியின் பல்நோக்குச் செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ச மற்றும் முன்னாள் தூதுவரும் வர்த்தகருமான உதயங்க வீரதுங்க ஆகியோருக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்கு உயர் நீதிமன்றில் கடந்த 19ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
நரேஹன்பிட்டிய விகாராதிபதி சுமங்கல தேரர் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலர் லைக்கி டீ சில்வா ஆகியோர் இணைந்து வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.
வழக்கின் முதலாவது பிரதிவாதியாக பஸில் உதயங்க வீரதுங்கவும், மூன்றாவது பிரதிவாதியாக சட்டமா அதிபரும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.
முதலாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகள் உக்ரேனிலிருந்து சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்து வந்தனர். தற்போதைய கொரோனா பரவலுக்கு அவர்கள் காரணமாக இருக்கின்றனர் என்று குற்றம் சுமத்தியுள்ளனர்.
கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதிக்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்ட கொரோனாத் தொற்று மற்றும் இறப்புத் தொடர்பிலும் சுற்றுலாப் பயணிகளை அழைத்து வந்தமை தொடர்பிலும் தனியானதொரு விசாரணை நடத்தப்படவேண்டும் என்று மனுதாரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மதுபானத்தை பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று ஒருவர் கைது

### 399 மதுபானப் போத்தல்கள் மீட்பு

யாழ்ப்பாணம், மே 24

யாழ்ப்பாணம், சுன்னாகத்தில் சட்டவிரோதமாக மதுபானத்தை பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்

சந்தேக நபரிடமிருந்து 399 போத்தல்கள் மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை ஒழுங்கையில் வசிக்கும் 28 வயதுடைய இளைஞன் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தனது வீட்டில் மதுபானத்தை பதுக்கி வைத்திருந்து பயணத்தடை காலப்பகுதியில் அதிக விலைக்கு விற்பனைசெய்கிறார் என்று கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். அவர் மல்லாகம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ப-26)

# நெடுந்தீவில் மணல் கொள்ளை; உடனடியாகத் தடுத்து நிறுத்துங்கள்

### கூட்டமைப்பு பொலிஸில் முறைப்பாடு

**யாழ்ப்பாணம், மே 24**

**சுற்றுலாத்துறைக்கு பெயர்போன நெடுந்தீவுக் கிராமத்தில் மணல் அகழ்வு முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ள நிலையில், நெடுந்தீவு மேற்கு ஜே/2 கிராம அலுவலர் பிரிவிலுள்ள சென் லோறன்சியார் தேவாலயத்தை அண்டியுள்ள கடற்கரைப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊர்காவற்றுறைத் தொகுதிக் கிளையினரால் பொலிஸில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளது.**



இது தொடர்பில் மக்கள் தெரிவிக்கையில்;

100 மீற்றர் நீளமான பகுதியில் மூன்று அடி ஆழம் வரைக்கும் மணல் அகழப்பட்டுள்ளது. உழவு இயந்திரம். மற்றும் லான்ட் மாஸ்ரர் போன்ற வாகனங்களில் மணல் எடுத்துச்செல்லப்படுகின்றது. இவ்வாறான மணல் அகழ்வால் கடல் நீர் முழுவதும் கிராமத்தினுள் ஊடுருவும் நிலை காணப்படுகின்றது எனவே உடனடியாக மேற்படி சட்டவிரோத செயற்பாட்டை பொலிஸார் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதோடு, மணல் கொள்ளையர்களை உடனடியாகக் கைதுசெய்து சட்டத்தின்முன் நிறுத்த வேண்டும் என்றனர்.

சம்பவம் தொடர்பில் வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், வேலணைப் பிரதேச சபை உறுப்பினர் கருணாகரன் நாவலன் மற்றும் தீவக சிவில் சமூக செயற்பாட்டாளர் கருணாகரன் குணாளன் ஆகியோர் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். அவர்களோடு தமிழ் அரசுக் கட்சியின் நெடுந்தீவு கிளை உறுப்பினர்களான மதுவண்ணன், ருத்ரன் மற்றும் ரத்தினம் போன்றவர்களும் மணல் அகழ்வு நடைபெற்றுள்ள கடற்கரையைப் பார்வையிட்டுள்ளனர். இது தொடர்பில் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊர்காவற்றுறை தொகுதிக் கிளையினரால் முறைப்பாடும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. (ப)

## ஆடைத் தொழிற்சாலையை நிரந்தரமாக மூடுங்கள்

### கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

முல்லைத்தீவு.மே 24

முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்குகின்ற ஆடைத் தொழிற்சாலையை மூடுவதற்கு மாவட்டத்தின் உயரதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் திருமதி. இமக்குலேற்றா புஸ்பானந்தன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்குகின்ற ஆடைத் தொழிற்சாலையால் தான் மாவட்டத்தில் 250 க்கு மேற்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். எனவே மேலும் பல கொரோனாக் கொத்தணிகள் உருவாக முன்னர் குறித்த ஆடைத் தொழிற்சாலையை நிரந்தரமாக மூடுங்கள். எமது மாவட்டத்துக்கு ஆடைத் தொழிற்சாலை தேவையில்லை. அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தொழில் இழக்கின்ற பெண்களுக்கு வேறு தொழில்களை பெற்றுக்கொடுங்கள். ஆனால் மாவட்டத்தின் பெருமளவு கொரோனா நோயாளர்கள் இனங்காணப்பட்ட ஆடைத் தொழிற்சாலையை நிரந்தரமாக மூடுங்கள். ஆடைத் தொழிற்சாலையால் தான் இன்று மாவட்டமே கொரோனா அபாயத்துக்குள் சிக்குண்டுள்ளது - என்றார். (ஐ

## மக்கள் பிடித்துக்கொடுத்தவரை பொலிஸார் விடுவித்தனர்



வீடுகளில் நீண்ட நாள்களாகத் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட நபர் இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டபோதும், பொலிஸார் அவரை விடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் மன்னார் மூர்வீதி, குருசுக்கோவில் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் திருட முற்பட்டபோது அப்பகுதி இளைஞர்களால் குறித்த நபர் மடக்கிப் பிடிக்கப்பட்டார். அவரைக் கட்டிவைத்த இளைஞர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் குறித்த நபரைக் கைதுசெய்து பொலிஸ் நிலையம் கொண்டுசென்றனர். எனினும் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று மக்கள் குற்றஞ்சாட்டினர்.

குறித்த பகுதியில் உள்ள வீடுகளில் தொடர்ச்சியாக கோழிகள் திருட்டுப்போவதோடு, வீடுகளில் உள்ள துவிச்சக்கர வண்டிகள் உட்பட பெறுமதியான பொருள்கள் நாளாந்தம் திருட்டுப் போகின்றன. இவ்வாறான நிலையில் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்ட திருடனை பொலிஸார் விடுவித்தது விசனத்துக்குரியது என்று மக்கள் தெரிவித்தனர். (ப-56)

## 3 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது

கிளிநொச்சி.மே 24

3 கிலோ 750 கிராம் கஞ்சா போதைப் பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் விசுவமடு நாதன்குடியிருப்பு பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

தருமபுரம் பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தருமபுரம் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சிசெர தெரிவித்துள்ளார். (ஐ-6,113)

## கரந்தாய் – மாசார் வீதியின் சீரமைப்பு பணிகள் ஆரம்பம்

கிளிநொச்சி.மே 24

கிளிநொச்சி-பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக் குட்பட்ட மாசார் கரந்தாய் இணைப்பு வீதியின் சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக குறித்த வீதி சீரமைப்பு இன்றி மணல் வீதியாக காணப்பட்டது.

பளை பிரதேசத்தின் கிராமங்களான மாசார், முருகாந்த நகர் மற்றும் முகவில் ஆகிய கிராமங்களை இணைக்கும் இவ் வீதியின் நிலை குறித்து பிரதேச மக்கள் மற்றும் பொது அமைப்பினர் அதிகாரிகளிடம் தெரியப்படுத்தியிருந்தனர்.

இதனையடுத்து மாகாண குறித்தொதுக்கப்பட்ட 6 மில்லியன் ரூபா செலவில் வீதியின் சீர

## மரம் முறிந்து வீழ்ந்ததில் வீட்டின் கட்டடம் சேதம்

### வீசிய கடும் காற்றால்

முள்ளியவளை பகுதியில் நேற்று முன்தினம் காலை வீசிய கடும் காற்றால் மரம் ஒன்று முறிந்து வீட்டின் கட்டடத்தின்மீது வீழ்ந்துள்ளது. இதனால் குறித்த கட்டடத்தின் கூரைப்பகுதி உள்ளிட்டவை சேதமடைந்துள்ளதுடன், எவருக்கும் ஆபத்து ஏற்படவில்லை

தென் மேற்கு வங்க கடலுக்கு அருகில் வளிமண்டலத்தில் காணப்படும் காற்றமுத்த தாழமுக்கம் இன்று 24 ஆம் திகதி புயலாக மாற்ற மடையலாம் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.



அவ்வப்போது மழை மற்றும் காற்றின் வேகம் அதிகரிக்கலாம் என்றும் அறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போன மீனவர்கள் கற்கடலைவத் தீவில் கண்டுபிடிப்பு

மன்னார், மே 24

**மன்னாரில் நண்டு பிடிக்கச் சென்று படகுடன் காணாமல் போன மீனவர்கள் இருவரும், நேற்று யாழ்ப்பாணம், கற்கடவைத் தீவின் அருகில் கண்டு பிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளனர்.**

மன்னார் மாவட்டத்தில் கடந்த இரு தினங்களாக கடும் காற்றும் கடல் கொந்தளிப்பும் காணப்படுவதால் மன்னார் பகுதியைச் சேர்ந்த மீனவர்களை கடலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனால் மீனவர்கள் தென் கடல் பிராந்தியம் மற்றும் மன்னார் வட கடல் பிராந்தியத்தில் ஆழ்கடலுக்குச் செல்லாது கடந்த இரு தினங்களாக கரையோரத் தொழிலையே மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பேசாலை காட்டாஸ்பத்திரி பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பத் தலைவர்களான எல்.றஸ்ஹான், என்.நிலாம் ஆகிய இரு மீனவர்கள் வழமைபோன்று அதிகாலை காட்டாஸ்பத்திரி துறையிலிருந்து நண்டு பிடிப்பதற்கு ஒரு படகில் வடகடல் கரையோரத் தொழிலுக்குச் சென்றுள்ளனர். இவர்கள் வழமைபோன்று அன்று பிற்பகல் வரை கரை திரும்பவில்லை. அன்றையதினம் கடல் கொந்தழிப்பாகக் காணப்பட்டதால், உடனடியாக இவர்களைத் தேடிச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

எனினும் காணாமல் போன மீனவர்களைத் தேடி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை பேசாலை காட்டாஸ்பத்திரியிலிருந்து ஆறு படகுகளில் மீனவர்கள் சென்றுள்ளனர். யாழ்ப்பாணம், பகுதிலுள்ள கற்கடவைத் தீவுக்கு அருகில் படகு நங்கூரமிடப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளது.

இதனை அடுத்து, அவர்கள் படகுடன் மீட்கப்பட்டுள்ளனர். படகின் வெளிக்கள இயந்திரம் பழுதடைந்தமையாலேயே இவர்கள் படகை காற்றுக்கு வலியவிட்டு ஒரு கரையை அண்டிய நிலையில், படகுக்கு நங்கூரமிட்டு பாதுகாப்பாக இருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ப-60)



## பொருண்மியம் நலிந்த மாணவிக்கு உதவிகள்

வவுனியா,மே 24

வவுனியா வடக்கு நெடுங்கேணி ஒலுமடு தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று வரும் பொருண்மியம் நலிந்த குடும்பத்தைச் சேர்ந்த மாணவி ஒருவருக்கு சைக்கிள் மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பவை வழங்கப்பட்டன.

அமரர் வீரசிங்கம் செல்லையாவின் 20ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு ஜேர்மன் நாட்டில் வசித்துவரும் அன்னாரின் மகன் உதயராஜ்ஜின் நிதிப் பங்களிப்பில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

(ஐ-70)

## பெசன்புரூட் செய்கையாளர்களும் பயணத் தடையால் கடும் பாதிப்பு

*மாற்று ஏற்பாடுசெய்யுமாறு கோரிக்கை*



வவுனியா, மே 24

கொரோனாத் தொற்றால் ஏற்பட்டுள்ள பயணத் தடை காரணமாக பெசன்புரூட் செய்கையாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு அனந்தர்புளியங்குளம் மற்றும் சின்னப்பூவரசங்குளம் ஆகிய பகுதிகளில் நடப்பாண்டில் பெருமளவில் பெசன்புரூட் செய்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது அறுவடைக்காலம் நெருங்கியுள்ள நிலையில் நாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ள பயணத்தடையால் அறுவடைசெய்தாலும் அவற்றை விற்பனைசெய்ய முடியாது செய்கையாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பெசன்புரூட் செய்கையாளர்கள் தெரிவிக்கையில்;

கொரோனாத் தொற்றுக் காரணமாக முன்னெடுக்கப்பட்டுள்ள பயணத்தடையால் நாடளாவிய ரீதியில் அனைத்து வியாபார நிலையங்களும் மூடப்பட்டுள்ளன. இதனால் தெற்கிலிருந்து பெசன்புரூட் பழங்களைக் கொள்வனவுசெய்யும் வியாபாரிகளின் வருகை குறைவடைந்துள்ளது. அத்துடன் ஒரு கிலோ பெசன்புரூட் பழங்கள் 150 தொடக்கம் 200 ரூபா வரை விற்பனைசெய்து வந்த நிலையில் தற்போது ஒரு கிலோ 40 ரூபாவுக்கே கொள்வனவுசெய்யப்படுகின்றது. இதனால் உற்பத்திச் செலவைக் கூட ஈடுசெய்ய முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. வியாபாரிகளின் வருகை குறைவடைந்துள்ளதால் பழங்கள் மரங்களிலேயே பழுத்து, பழுதடையும் நிலையும் ஏற்பட்டுள்ளது. எனவே எமது பிரச்சினைகள் தொடர்பாக அரசு கவனம்செலுத்தி மாற்று ஏற்பாடுகளை முன்னெக்கவேண்டும் - என்றனர்.

(ப-110)

## துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்துள்ள யானையைக் காப்பாற்ற போராட்டம்

*அதிகாரிகளும் கூடிய கவனம்*



வவுனியா.மே 24

வவுனியா-புளியங்குளம் பகுதியில் காயமடைந்த நிலையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் யானைக்கு தொடர்ச்சியாக 10ஆவது நாளாகவும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

வவுனியா-புளியங்குளம் புதூர்காட்டுப் பகுதியில் கடந்த 14ஆம் திகதி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் 12 வயது மதிக்கத்தக்க யானைக்கு இராணுவத்தினர், வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மற்றும் கிராம மக்கள் ஆகியோரின் உதவியுடன் கால் நடை மருத்துவர் கிரிதரன் சிகிச்சை அளித்து வருகின்றார்.

இந்நிலையில் காயமடைந்த குறித்த யானையை மாவட்டச் செயலர் சமன் பந்துலசேன, உதவி மாவட்டச் செயலாளர் சபர்ஜா, வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரதாபன், இராணுவ உயர் அதிகாரிகள், பொலிஸ் உயர் அதிகாரிகள், மடுகந்தை பௌத்த துறவி மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர். (ப-110)

## கொரோனாவை விரட்ட சிறுப்பிட்டியில் வழிபாடு

கோப்பாய்,மே 24

உலகெங்கும் வாழ்கின்ற மக்கள் அனைவரும் கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட வேண்டி யாழ்ப்பாணம் கோப்பாய் சிறுப்பிட்டி வடக்கு அருள்மிகு முத்துமாரி அம்மன் ஞான வைரவர் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

பூசை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் முதன்மைக் குரு சிவப்பிரம்மஸ்ரீ பா.கஜீலக்குருக்களின் அருளாசி உரையும், வேதபராயணமும் நடைபெற்வுள்ளன.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்து ஆலயங்கள்தோறும் கொரோனாத் தொற்றில் இருந்து விடுபட சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## வலயக்கல்வி பணிப்பாளர்மீது தாக்குதல்; கிளி. மாவட்ட அதிபர்கள் சங்கம் கண்டனம்

கிளிநொச்சி,மே 24

கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் உடல் ரீதியாக தாக்கப்பட்டமையை வன்மையாக கண்டிக்கிறோம் என்று கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 19 ஆம் திகதி கிளிநொச்சி வலயக்கல்வி பணிப்பாளர் கமலராஜன்மீது ஒய்வு நிலை பணியாளர் ஒருவர் தாக்குதலை மேற்கொண்டிருந்தார். இவ் விடயம் தொடர்பாக வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்விப் பணிப்பாளர் கடமையில் உள்ள நேரத்தில் அவரது அலுவலகத்தில் வைத்து முன்னாள் பாடசாலை பணியாளர் ஒருவரால் உடல்ரீதியாக மோசமாகத் தாக்கப்பட்டமை அதிர்ச்சியைத் தருகிறது. கல்விசார் பணி என்பது சமூக நலனை முதன்மைப்படுத்தும் பணி இதில் வலயத்துக்கு தலைமை தாங்கும் வலயக் கல்விப் பணிப்பாளர் முக்கியமானவர் தார்மீக அடிப்படையில் இவ்வாறு பணி செய்பவர்கள் வன்முறைக்கு உள்ளாவது என்பது இந்த பிரதேச மக்களின் வன்முறை உணர்வின் மேலும் இது எமது சமூகம் குறிப்பாக கல்விப்புலம் எங்கு போய்க் கொண்டிருக்கிறது என்பதையும் எதிர்வு கூறுகின்றது. எனின் இந்நிலையில் எதிர்கால சந்ததிக்கான கல்வியை புலமை செயற்பாடாக எவ்வாறு தீவிரமாகவும் வினைத்திறனாகவும் கண்ணியமாகவும் முன்னெடுக்க முடியும் என்ற கேள்வி எழுகிறது.

எனவே வலயக்கல்வி பணிப்பாளர் மீதான தாக்குதலை கல்விப் பணி செய்யும் சகலர் மீதான அவமதிப்பாக கருதுகிறோம் - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### மோட்டார் வாகன தண்டத்தை

## மேலதிக கட்டணம் இன்றி தபாலகங்களில் செலுத்தலாம்

கொழும்பு,மே 24
2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 5 ஆம் திகதி அல்லது அதற்கு பின்னர் பிறப்பிக்கப்பட்ட மோட்டார் வாகன தண்டத்தை நாடு பூராகவும் உள்ள அனைத்து தபால் நிலையங்களிலும் செலுத்த முடியும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.
தண்டத்தொகையை செலுத்துவதற்கான 14 நாள் களை கடந்த போதிலும் மேலதிக எவ்வித கட்டணமும் இல்லாமல் தண்டத் தொகையை செலுத்த முடியும் என்று தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரி வித்துள்ளார். குறித்த சலுகை காலம் மீள அறிவிக் கும் வரையில் அமுலில் இருக்கும் என்றும் தெரிவிக் கப்படுகின்றது. (ஐ-இ)

## தனிமையை மீறுவோரை கண்டறிய ட்ரோன் தொழில்நுட்பம்

கொழும்பு,மே 24
தனிமைப்படுத்தல் விதிகளை மீறுவோரை கண்டறிவதற்கு ட்ரோன் தொழில்நுட்பம் ஊடாக விசேட கண்காணிப்பு நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படவுள் ளன. கொழும்பு மற்றும் அதனை அண்டிய புறநகர் பிரதேசங்களி லுள்ள குடியிருப்பு பகுதிகளி லேயே இவ்வாறு கண்காணிப்பு நடவடிக்கைகள் நேற்றுமுதல் முன்னெடுக்கப்படவுள்ளன என்று பொலிஸ் பேச்சாளர் தெரி வித்துள்ளார். கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதி களிலுள்ள தொடர்மாடி குடியிருப்புத் தொகுதி உள்ளிட்ட பகுதிகளி லுள்ள குடியிருப்பாளர்கள் அதி களவில் தனிமைப்படுத்தல் விதிகள் மீறுகின்றமை அவதா னிக்கப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித் துள்ளார். (ஐ-இ)

## தெற்கில் பல ஆறுகள் பெருக்கெடுக்கும் அபாயம்

நாட்டின் தென் மேற்கு பருவப் பெயர்ச்சி காரணமாக ஏற்படும் மழை யுடனான. வானிலையால், பல நதி நிலைகளில் வெள்ளப்பெருக்கு ஏற் படும் அபாயம் உள்ளது என்று நீர்ப் பாசனத் திணைக்களம் தெரிவித் துள்ளது.
அதற்கமைவாக மீ ஓயா, தெதுரு ஓயா, மஹா ஓயா, அத்தநாகல்லு ஓயா, களனி கங்கை, களு கங்கை, பெந்தர கங்கை, ஜின் கங்கை, நில வள கங்கை மற்றும் கிராம ஓயா ஆகியவை வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்படலாம் என்றும், அவற் றுக்கு அண்மித்த மற்றும் தாழ்வான பகுதியில் வசிக்கும் மக்கள் அவதா னத்துடன் செயற்பட வேண்டும் என் றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# 'பற்றிக்' வெசாக் கூடு பிரதமரிடம் கையளிப்பு

**கொழும்பு, மே 24**
**'பற்றிக்' துணியால் வடிவமைக்கப்பட்ட முதலாவது வெசாக் கூடு பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் கடந்த வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டுள்ளது.**



பற்றிக் கைத்தறி துறைகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இரா ஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, வெசாக் கூட்டை பிரதமரிடம் கைய ளித்தார். கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக, இந்தமுறை வீடுகளில் இருந்தவாறு வெசாக் பண் டிகையைக் கொண்டாடும் மக்களுக் காக, பற்றிக் கைத்தறி துறைகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சால் இந்த வேலைத்திட்டம் முன் னெடுக்கப்பட்டுள் ளது.
வெசாக் கொண்டாட்டங்களில் ஈடுப டும் மக்கள் தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்கள் ஊடாக வெசாக் அலங்கார நிர்மாணங்களைக் கண்டு களிப்பதற்கு வாய்ப்பளிப்பது இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.
வெசாக் அலங்காரங்களைப் புதுமை யான மற்றும் உள்ளூர் தோற்றத்துக்கு ஏற்ப தேசிய வடிவமைப்பு மையம் இதனை வடிவமைத்துள்ளது. தேசிய மூலப்பொருள்கள் மற்றும் கலாசார மரபுகளை மேம்படுத்தி பற்றிக் வடிவ மைப்புகளுக்கு ஒரு புதிய போக்கை உருவாக்குவதற்காக, இந்த வேலைத் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது என்று பிரதமரின் ஊடகப்பிரிவு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

## குருநாகல் மருத்துவமனை கட்டுமானப்பணிகள் ஆராய்வு

கொழும்பு, மே 24
குருநாகல் பொது மருத்துவமனையின் நிர் மாணப் பணிகள் தொடர்பாக, பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் ஆராயப் பட்டது.
இது தொடர்பான கலந்துரையாடல் அலரி மாளிகையில் இடம்பெற்றது. இது தொடர் பான ஊடக அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது,
இந்த மருத்துவமனையில் குருநாகல் மற் றும் புத்தளம் உள்ளிட்ட ஐந்து மாவட்ட மக் கள் நேரடியாகச் சிகிச்சைபெற முடியும். பிரதமரின் அறிவுறுத்தலுக்கமைய சிறப்பு வசதிகளுடன் மருத்துவமனை நிர்மாணிக் கப்பட்டு வருகின்றது.
பஸ்ஸில் வருகைதரும் நோயாளிகளுக்கு விசேட பஸ் சேவை மற்றும் மருத்துவமனை வளாகத்தில் பஸ் நிலையமொன்றை அமைத்தல் போதனா மருத்துவமனை மற் றும் சத்திரசிகிச்சை, சிறுவர் மற்றும் மகப் பேறு ஆகிய துறைகளில் உயர்மட்ட சேவையை வழங்கல், பிக்குகளுக்கான விடுதி வளாகம் மற்றும் மருத்துவமனையி லிருந்து அதிவேக நெடுஞ்சாலை மற்றும் ரயில் நிலையத்துக்கு நேரடிப் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தல் உள்ளிட்ட நிர்மா ணப்பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.
அதற்கமைவாக காணி அபிவிருத்திக் கூட் டுத்தாபனத்தின் ஊடாக மருத்துவமனை யின் கட்டுமானத்துக்கான நிரப்புதல்களை மூன்று மாதங்களில் நிறைவுசெய்யத் திட் டமிடப்பட்டுள்ளது.
அதற்கான நிலத்தைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகளை நகர அபிவிருத்தி அதி கார சபையின் கீழ் செயற்படுத்த பிரதமர் ஆலோசனை வழங்கினார்.
கலந்துரையாடலில் கொரோனாத் தடுப்பூசி வழங்கல் வேலைத்திட்டம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் நாமல் ராஜ பக்ச, மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்ப டாத வகையில் தடுப்பூசி வழங்கலை செயற் றிறன் மிக்கதாக முன்னெடுப்பதன் முக்கி யத்துவத்தைச் சுட்டிக்காட்டினார்.
கணினிப் பயன்பாட்டின் மூலம் ஒவ்வொரு நபரதும் கையடக்க தொலைப்பேசிக்கும் தடுப்பூசி தொடர்பில் விழிப்பூட்டும் வேலைத் திட்டம் மற்றும் தொழில்நுட்பப் பாவனை யற்ற மக்களுக்கு மற்றுமொரு வேலைத்திட் டம் ஊடாக நடவடிக்கையை மேற்கொள்வ தற்கு பிரதேச அபிவிருத்திக் குழு மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினரை இணைத்துக் கொள்ளும் முறை தொடர்பிலும் தெளிவூட்

## சிறைச்சாலை நெருக்கடிகளை குறைக்க கைதிகளுக்கு பிணை

கொழும்பு,மே 24
சிறைச்சாலைக்குள் கொரோனா பரவலடைவதைத் தடுப்பதற்கு, சிறைச்சாலைகளில் தடுத்து வைக் கப்படும் கைதிகளின் எண்ணிக்கை யைக் குறைக்கத் திட்டமிடப்பட்டுள் ளது.
அதற்கான யோசனைகள் சிறைச் சாலைகள் திணைக்களத்தின் ஆணையாளரால், நீதி அமைச் சின் செயலாருக்கு அனுப்பப்பட்டது.
இது தொடர்பில் கவனம் செலுத்தி யுள்ள சட்டமா அதிபர், புதிய பிணை வழிகாட்டிகள் அடங்கிய கடித மொன்றை பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பியுள்ளார்.
அதற்கமைவாக, போதைப்பொ ருள் தொடர்பான வழக்குப் பதிவுக ளின்போது இரண்டு கிராமுக்குக் குறைந்த மற்றும் 2 தொடக்கம் 4 கிராம் நிறையுடைய ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கைது செய் பிணை வழங்குவதற்கான புதிய முறை அறிமுகம் செய்யப்பட் டுள்ளது.
ஒரு வருட சிறைத் தண்டனை வழங் கக்கூடிய குற்றம் தொடர்பில், சந் தேக நபரை நீதிமன்றத்தில் முன்னி லைப்படுத்தும்போது , முதலாவது சந்தர்ப்பத்தில் பிணை வழங்குவதற் கான எதிர்ப்புக்கு விசேட காரணம் இல்லையாயின், அதனை நீதிமன் றத்தில் அறிக்கைப்படுத்த வேண் டும்.
பெண்கள் துஷ்பிரயோகம் தொடர் பான விசாரணைகளின்போது , பாதிக்கப்பட்ட பெண் 16 வயதுக்கு மேற் பட்டவராக இருக்கும் பட்சத்தில், சந் தேகநபர் திருமணமாகதவராகவும், அவர்கள் இருவரும் காதலர்களாக வும் தெரியவந்தால் , ஆரம்ப விசா ரணைகளின்போது பிணை வழங் குவதற்கு மறுப்புத் தெரிவிக்காமல் இருத்தல் போன்ற விடயங்கள் அதில்

## குடியிருப்பில் தீ விபத்து; 8 வீடுகள் எரிந்து நாசம்

ஹற்றன்,மே 24
நானுஓயா சமர்செட் தோட்டப்பகுதி யில் 10 வீடுகளைக் கொண்ட நெடுங் குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் 8 வீடுகள் எரிந்து நாசமாகியுள்ளன.
இந்த விபத்து நேற்றுக் காலை இடம் பெற்றுள்ளது. இதில் 4 வீடுகள் முழுமையாகவும், 4 வீடுகள் பகுதிய ளவிலும் சேதமடைந்துள்ளன.
இத் தீவிபத்தால் உயிர்சேதம் எதுவும் ஏற்படாதபோதிலும், பெருமளவில் பொருள்தேசங்கள் ஏற்பட்டுள்ளன.
இந்த வீடுகளில் குடியிருந்த 8 குடும் பங்களை சேர்ந்த 37 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர்.
பாதிக்கப்பட்ட இவர்களை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தோட்ட வாசிகசாலையில் தங்கவைக்க ஏற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இந்த தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் நானுஓயா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (ஐ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை சீனாவின் கொலனியாக்கி விட்டனர்



## சந்திரிகா சீற்றம்

**கொழும்பு, மே 24**

**கொழும்பு துறைமுக நகர சட்ட வரைவு ஊடாக இலங்கையை சீனாவின் கொலனியாக்கியுள்ளனர். இது பயங்கரமானதொரு நிலையாகும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

இலங்கையானது பல தசாப்தங்களாக அந்நியர்களின் ஆக்கிரமிப்பின் கீழ் இருந்தது. இந்த நிலையில் நாட்டை மீட்பதற்காக எமது மூதாதையர்கள் பெரும் பாடுபட்டனர். போராடினர். உதிரம் சிந்தினர்.

அதன் விளைவாகவே 1948 ஆம் ஆண்டில் சுதந்திரம் கிடைத்தது. 1972 ஆம் ஆண்டில் நாடு முழுமையாகச் சுதந்திரம் அடைந்தது.

நாம் கடந்து வந்த பாதையை மறந்து, ஆட்சியாளர்கள் நாட்டை சீனாவின் கொலனியாக்கியுள்ளனர்.

இந்த வரைவு தவறானது என்று உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருந்தது. நாட்டு மக்களும் இதற்கு எதிர்ப்பு.

ஆனால் வீதியில் இறங்கி எதிர்ப்பை வெளியிடமுடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. இவ்வாறான தொரு பின்புலத்தில் அவசர அவசரமாக சட்ட வரைவு நிறைவேற்றப்பட்டுள்ளது. நாட்டை முடக்கி மக்களைப் பாதுகாப்பதற்கு முன்னுரிமை வழங்காமல், அரசமைப்புக்கு முரணான வகையில் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதற்கு ஆதரவு தெரிவித்து கட்சியையும், கட்சியின் உயரிய கொள்கையையும், ஆதரவாளர்களையும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தற்போதைய தலைமை காட்டிக்கொடுத்துள்ளது- என்றார். (எ-4,44)

# சட்டவரைவுக்கு ஆதரவளித்து மக்களை ஏமாற்றி விட்டனர்

## தே.வி.ம.மு. விசனம்

கொழும்பு, மே 24

கொழும்பு துறைமுக நகர சட்ட வரைவுக்கு ஆதரவளித்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும், மக்களின் உரிமைக் கனவுகளையும் தவிடுபொடியாக்கி விட்டனர்.

இவ்வாறு தேசிய விடுதலை மக்கள் முன்னணியின் தலைவர் முஸம்மில் முகைதீன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இஸ்ஹாக் மற்றும் அலி சப்ரி இருவரும் வரலாறு படைத்தவர்கள். இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு ஒரு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிபெற முடியாத மாவட்டங்களில் இவ்விருவரும் வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்றனர். இரு மாவட்டங்களிலும் முஸ்லிம்களின் உரிமைகளைப் பிரிக்கும்போது தட்டிக்கேட்க முஸ்லிம் கட்சிகளின் உறுப்பினர்கள் அதிகம் இருக்க வேண்டும் என்ற உன்னதமான உணர்வோடு மக்கள் இவர்களுக்கு வாக்களித்தனர்.

இவர்கள் இருவரின் வெற்றிக்குக் காரண கர்த்தாவாக இருந்தவர் ரிஷாத். ரிஷாத் எந்த குற்றமும் இல்லாமல் பழிவாங்கும் நோக்குடன் அரசால் சிறைபிடிக்கப்பட்டு இருக்கும்போது, இவர்கள் இருவரும் அரசை ஆதரித்துள்ளமை ஒரு பாரதூரமான விடயம். இவர்கள் தலைவரை உதாசீனம் செய்தது மட்டுமல்ல. இந்த இருமாவட்ட மக்களின் உரிமைக் கனவுகளையும் தவிடுபொடியாக்கி விட்டனர். எதிர்காலத்தில் இவர்கள் எப்படி மக்களுக்காக இயங்குவார்கள் என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும்- என்றார். (எ-4)



# வளம் இல்லாது பாடசாலைகளை தரமுயர்த்துவதால் என்ன பயன்?

## வேலுகுமார் எம்.பி. கேள்வி

கொழும்பு,மே 24

பாடசாலைகளில் வளங்களை அதிகரிக்காமல், அவற்றை தேசிய பாடசாலைகளாக மாற்றியமைத்து என்ன பயன்? இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் கேள்வியெழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கையில்,

தேசிய பாடசாலைத் திட்டம் ஓராண்டுக்கு முன் முன்மொழியப்பட்டது. ஓராண்டு கடந்து தேசிய பாடசாலைகளாகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதனூடாக மாகாண அரசின் கீழிருந்த பாடசாலையின் உரித்தும், நிர்வாகமும் மத்திய அரசின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

மனிதவள ரீதியாகவும், பௌதீக வள ரீதியாகவும் தேசிய மட்ட பாடசாலை ஒன்றுக்கு சமநிலை பெறுகின்ற போதே அந்தப் பாடசாலை தேசிய மட்டத்தை அடைகின்றது. தற்போது இருக்கின்ற பாடசாலைகளில் வளங்கள் நிறைந்த பாடசாலைகளை, அல்லது பெரிய பாடசாலைகளை தேசிய பாடசாலை என்று பெயரிட்டுவிட்டால் அது சரியானதா?

அல்லது தேவையின் அடிப்படையில் சில பாடசாலைகளைத் தெரிவு செய்து, அவற்றுக்கு அவசியமான மனித, பௌதீக வளங்களைப் பெற்றுக் கொடுத்து, வளம் நிறைந்த பாடசாலையாக உயர்த்தி, தேசிய பாடசாலை என மாற்றுவது சரியானதா? என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

கடந்த காலத்திலான ஆயிரம் பாடசாலை திட்டம், அதனுடன் தொடர்புபட்டதான மஹிந்தோதய தொழில்நுட்பகூடம் என்பவற்றை நாம் மறந்து விடக் கூடாது. அதில் சிக்கி இன்னும் வெளியே வர முடியாமல் தத்தளித்துக்கொண்டிருக்கும் பல

# இரு முஸ்லிம் முதன்மை கட்சிகள் ராஜபக்சக்களின் கட்டுப்பாட்டில்

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,மே 24

முஸ்லிம் கட்சிகள் அதன் தலைவர்களின் கட்டுப்பாட்டில் இல்லை என்று திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

துறைமுக நகர சட்டவரைபுக்கான வாக்கெடுப்பு தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று காணப்படும் முதன்மையான இரு முஸ்லிம் கட்சிகளும் அதன் தலைவர்களின் கட்டுப்பாட்டில் இல்லை. அது ராஜபக்சக்களின் கட்டுப்பாட்டில் உள்ளமை இருபதாம் திருத்தம் மற்றும் துறைமுக நகர சட்டவரைபு வாக்கெடுப்பின் மூலம் தெளிவாகிறது.

இருபதாம் திருத்த சட்டவரைபில் தலைவர் எதிராகவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாகவும் வாக்களித்தனர். அதன்பின் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இனி அவர்கள் கட்சியின் முடிவுகளுக்கு கட்டுப்பட்டு நடப்பார்கள் என தெரிவிக்கப்பட்டது.

ஆனால் துறைமுக நகர சட்டவரைபில் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்தும் ராஜபக்சக்களின் காட்டுப்பாட்டிலேயே உள்ளனர் என்பது புலனாகியது-என்றார். (ஐ)

# புலிகளின் தலைவர் பிரபாகரனின் படம் வைத்திருந்தோர் விடுதலை

கொழும்பு, மே 24

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் புகைப்படத்தை, அலைபேசியில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 14 வயதான சிறுவனும் அவருடன் தங்கியிருந்த 21 வயதான மற்றுமொரு இளைஞரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தலா ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில், இவர்களை பிணையில் விடுதலை செய்யுமாறு, புத்தளம் பதில் நீதவான், நேற்றுமுன்தினம் மாலை உத்தரவிட்டுள்ளார். (ஒ.இ)









யாழ்ப்பாணக் குடாநாட்டில் முக்கிய வீதிகளில் நேற்று பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அத்தியாவசிய தேவை தவிர்த்து வீதிகளில் பயணிப்போர் எச்சரிக்கை செய்து வீடுகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர். (ப-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசி வழங்கல் திட்டத்தில் பாரதூரமான குறைபாடுகள்!

## சமூக மருத்துவக் கல்லூரி குற்றச்சாட்டு

**கொழும்பு, மே 24**

**இலங்கையில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளில் பாரதூரமான குறைபாடுகள் காணப்படுகின்றன என்று தெரிவித்துள்ள சமூக மருத்துவக் கல்லூரி, 6 விடயங்களை பிரதானமாகச் சுட்டிக்காட்டியுள்ளது.**

கொரோனா தடுப்பூசி வழங்கலில் தெளிவான திட்டம் இல்லாமை, சிக்கல்கள் மற்றும் இறப்புகளைக் குறைக்க கிடைக்கக்கூடிய குறைந்த அளவு தடுப்பூசிகளின் முன்னுரிமையை சரியான வகையில் அடையாளப்படுத்தாமை, தேவைக்கும் வழங்கலுக்கும் பொருத்தமில்லாத திட்டமிடல்கள், தடுப்பூசி தொடர்பான பரப்புரைகளில் அதனுடன் தொடர்புபடாத பல தரப்புக்கள் தலையீடு செய்கின்றமை உள்ளிட்ட பல விடயங்களைக் குறிப்பிட்டுள்ளது.

தடுப்பூசி தொடர்பான விடயங்களில் உயர் மட்டத்தில் முடிவுகள் எடுக்கப்பட்டாலும், அதனை நடைமுறைப்படுத்துபவர்களுக்கிடையில் போதிய தொடர்பாடல்கள் இல்லை என்பதை சமூக மருத்துவக் கல்லூரி கண்டறிந்துள்ளது.

தடுப்பூசி பயன்படுத்துவதில் முறைகேடுகள் மற்றும் அஸ்ராஜெனெகா தடுப்பூசி பெற்றவர்களுக்கு தடுப்பூசிகளை வழங்கி முடிப்பதில் நிச்சயமற்ற தன்மை ஆகியவை கடந்த சில வாரங்களில் பல சிக்கல்களுடன் கண்டறியப்பட்டுள்ளன என்று சமூக மருத்துவக் கல்லூரி குறிப்பிடுகின்றது.

தேசிய பொதுச் சுகாதார தடுப்பூசி திட்டத்தை குழப்பியடிக்க சில குழுக்கள் வேண்டுமென்றே முயற்சித்துள்ளன என்பதையும் சமூக மருத்துவக் கல்லூரி அவதானித்துள்ளது என தெரிவிக்கின்றது.

சரியான நேரத்தில் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்தல், நிதி ஒதுக்கீடு, ஊழியர்களின் பயிற்சி, நன்கு ஒருங்கிணைந்த முன்னுரிமைப்படுத்தல் மற்றும் அதிக ஆபத்துள்ள குழுக்களை விரைவாக அடைவதற்கான திட்டமிடல்கள் என்பவை இல்லை என்று சமூக மருத்துவக் கல்லூரி குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையின் சனத்தொகையின் 8 சதவீதத்தினர் மாத்திரம் முதலாவது டோஸைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,5,இ)

# கொரோனா நிவாரண நிதி விரைவில் கணக்காய்வுக்கு

## கணக்காய்வுத் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, மே 24

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் ஆரம்பிக்கப்பட்ட கொரோனா நிவாரண நிதியத்தை (இடுகம) கணக்காய்வுத் திணைக்களம் கணகாய்வு செய்வதற்கான ஏற்பாடுகள் இல்லை. அது நாடாளுமன்றத்தால் தனியானதொரு சட்டமாக ஏற்றுக்கொள்ளப்படாமையால் கணக்காய்வுசெய்ய முடியாது என்று பிரதி கணக்காய்வாளர் நாயகம் பெரேரா தெரிவித்தார்.

'ஜனாதிபதி செயலக கணக்காய்வுத் திணைக்களம் தான் கொரோனா நிவாரண நிதியத்தை கணக்காய்வு செய்வதற்கான ஒரே வழி' என்று அவர் குறிப்பிட்டார்.

'நாடாளுமன்றத்தில் அடுத்த வரவு செலவுத் திட்டம் சமர்பிக்கப்படுவதற்கு முன்னர் இந்த நிதியம் கணக்காய்வு செய்யப்படும்' என்று பெரேரா தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தின் கணக்குகளை விரைவில் கணக்காய்வு செய்யப்படும் என்று பெரேரா குறிப்பிட்டார்.

இதேவேளை ஜனாதிபதி செயலகத்தின் பிரதம கணக்காளரும், இடுகம நிதியத்தின் செயலருமான ரவீந்திர விமலவீர, இடுகம நிதியத்தின் கணக்குகள் விரைவில் கணக்காய்வு செய்யப்படும் என்பதை உறுதிப்படுத்தினார். அத்துடன் இடுகம நிதியத்துக்கு கிடைக்கப் பெற்ற நிதிகள் தவறான வழிகளில் கையாளப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார். (ஒ,5,இ)

# அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகளவான பி.சி.ஆர். சோதனை

## கொழும்பு தனியார் மருத்துவமனைக்கு சுகாதாரத் திணைக்களம் எச்சரிக்கை

கொழும்பு, மே 24



ஒரு நாளில் பி.சி.ஆர். சோதனை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகளவான பி.சி.ஆர். சோதனைகளை 5 தடவைகள் மேற்கொண்ட கொழும்பிலுள்ள பிரபல தனியார் மருத்துவமனைக்கு சுகாதார அமைச்சால் இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தனியார் மருத்துவமனைகள் அவர்களுக்கு வழங்கப்பட்ட அளவிலும் அதிகமான பி.சி.ஆர். சோதனை மேற்கொள்வது கண்டறியப்பட்டால் அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் அனுமதி உடனே இரத்துச் செய்யப்படும் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

'தனியார் மருத்துவமனைகளில் ஒரு நாளைக்கு எத்தனை பி.சி.ஆர். சோதனைகளை மேற்கொள்ள முடியும் என்ற அறிவுறுத்தல் உட்பட பல்வேறு விடயங்களை உள்ளடக்கி சுற்றறிக்கை வெளியிட்டிருந்தோம். நாம் அனுமதித்த அளவை விட அதிகளவான பி.சி.ஆர். சோதனைகளை மேற்கொள்ளப்படுகின்றன என கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனை தொடர்பில் முறைப்பாடு கிடைத்தது. உடனடியாக அவர்களை எச்சரிக்கை செய்ததுடன் இதுவே இறுதி எச்சரிக்கை என்பதையும் தெரிவித்தோம். இதன் பின்னரும் ஏதாவது முறைப்பாடுகள் கிடைத்தால் அவர்களது அனுமதிப்பத்திரம் இரத்துச்செய்யப்படும்' என்று அசேல குணவர்த்தன குறிப்பிட்டார்.

சுகாதார அமைச்சால் ஆயிரத்து 200 பி.சி.ஆர். பரிசோதனைகளே நாளொன்றுக்குச் செய்யமுடியும் என்று அறிவுறுத்தியிருந்தபோதும், மேற்படி தனியார் மருத்துவமனை 7 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகளை ஒரே நாளில் செய்துள்ளது.

இதே தனியார் மருத்துவமனை, துல்கிரியவிலுள்ள ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களில் பி.சி.ஆர். தொற்று ஏற்பட்டவர்கள் தொடர்பான விவரங்களை அழித்ததாக குற்றச்சாட்டுக்குள் உள்ளானமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5,இ)

# கொரோனாத் தொற்றாளர்களுக்கான அவசர ஒழுங்கு வரிசை தயாரிப்பு

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி தகவல்

கொழும்பு, மே 24

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் நிலையில், தொற்றாளர்களை முன்னுரிமைப்படுத்தி சிகிச்சையளிப்பதற்கான ஒழுங்குகளைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என ஆரம்ப சுகாதார பராமரிப்பு மற்றும் கொரோனாக் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னான்டோபுள்ளே தெரிவித்தார்.

'இதன் முன்னோடித் திட்டம் களுத்துறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன அதனைச் சென்று கடந்த 21ஆம் திகதி பார்வையிட்டுள்ளார்' என்று சுதர்ஷனி பெர்னான்டோபுள்ளே சுட்டிக்காட்டினார்.

வயதானவர்கள் மற்றும் சிக்கலுக்குரிய நோய் நிலைமைகள் உள்ளவர்கள் ... ரிமைப்படுத்தப்படுவார்கள். அதேவேளை, கொரோனா நோயாளி தொற்று ஆபத்துள்ள பகுதியைச் சேர்ந்தவரா என்பதையும் சுகாதார அதிகாரிகள் கவனத்தில் எடுப்பார்கள் என்று பெர்னான்டோபுள்ளே குறிப்பிட்டார்.

தொற்று அறிகுறியற்ற மற்றும் தொற்று அறிகுறியுள்ள இருவகை நோயாளர்களும் மருத்துவமனைக்கு நேரடியாக வருவதால் சுகாதார அதிகாரிகளுக்கு நெருக்கடி அதிகரித்துள்ளது என பெர்னான்டோபுள்ளே தெரிவித்தார்.

முன்னுரிமை முறைமை நடைமுறைக்கு வந்த பின்னர், சிகிச்சை தேவைப்படும் தொற்றாளர்களை அதற்குரிய இடங்களுக்கு அனுப்பிவைத்தால் சுகாதார அதிகாரிகள் தற்போதுள்ள நிலைமையைச் சிறப்பாகக் கையாளக் கூடிய வகையில் இருக்கும் என்று எதிர்பார்க்கின்றோம் என பெர்னான்டோ...

# நோயாளிகளுக்கான உரிமைகளை மருத்துவமனைகள் புறக்காணிக்காது

## அறிகுறிகள் தென்படின் மருத்துவமனைக்குச் செல்லுங்கள்

கொழும்பு,மே 24

நோயாளிகளுக்கான உரிமைகளை மருத்துவமனைகள் புறக்கணிக்க முடியாது. எனவே கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகள் தென்படும் எவரும் வீட்டில் தங்கியிருந்து அவதிப்படாது அருகிலுள்ள மருத்துவமனைகளுக்குச் செல்லுங்கள்.

இவ்வாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கொரோனாத் தொற்று இந்தியாவில் ஏற்பட்டதைப் போன்று, இன்னமும் இலங்கையில் ஏற்படவில்லை. இருந்தாலும் நாம் விழிப்பாகவும், அவதானத்துடனும் இருக்க வேண்டும். சுகாதார நடைமுறைகளை முழுமை இல்லாமல் சுகாதார நடைமுறைகளை மீறி, பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டால் இந்தியாவில் ஏற்பட்ட நிலைமையை நோக்கி நகரவேண்டிய நிலை எமக்கு ஏற்படும்.

தற்போது மருத்துவமனைகளில் நோயாளிகள் சேர்க்கப்படுவதற்கு முன்னரே அவர்கள் உயிரிழக்கும் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக நோயாளியொருவருக்கு சிகிச்சை பெறுவதற்கு உள்ள உரிமையை, எந்தவொரு அரச மருத்துவமனையும் நிராகரித்துவிட முடியாது. எனவே, கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நோயாளியை வீட்டில் வைத்திருக்காமல், அருகிலுள்ள மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லுங்கள் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் பொருளாதாரம் மீண்டும் பின்னடைவு

## மத்திய வங்கி சுட்டிக்காட்டு

**கொழும்பு,மே 24**
**கொரோனாத் தொற்றுக் காரணமாக நாட்டின் பொருளாதாரம் மீண்டும் பெரும் சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கையில்,

2020 ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டு மற்றும் 2021 இன் ஆரம்ப காலப்பகுதிகளில் குறிப்பிடத்தக்களவு உத்வேகமடைந்த இலங்கையின் பொருளாதாரமானது, கொரோனா மூன்றாவது அலையின் காரணமாக மீண்டும் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளது.

பயணக்கட்டுப்பாடுகள் மற்றும் தடுப்பூசி வழங்கல் ஆகியவற்றின் காரணமாக பொருளாதாரத்தின் மீதான தாக்கம் இரண்டாம் அலையின் போது ஏற்பட்டதை விடவும் குறைவாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் உலகளாவிய தொற்றின் பாதகத்தன்மை மற்றும் அதனால் பொருளாதாரத்தின் நிலைபேறான வளர்ச்சிக்கு ஏற்பட்டுள்ள சவால்கள் ஆகியவற்றை மூன்றாம் அலையின் மூலம் தெளிவாக உணரக்கூடியதாக உள்ளது.

அதனால் மத்திய வங்கியின் துணைநில் வைப்புவசதி வீதத்தையும், துணைநில் கடன் வழங்கல் வசதி வீதத்தையும் முறையே 4.50 சதவீதம் மற்றும் 5.50 சதவீதம் என்ற மட்டங்களில் பேணுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தற்போது நிலவும் தாழ்ந்த பணவீக்கச் சூழல், நன்கு நிலைநிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகள் மற்றும் மூன்றாம் அலையால் தோன்றியுள்ள புதிய சவால்கள் என்பவற்றின் பின்னணியில் நீடித்து நிலைத்திருக்கும் பொருளாதார மீட்சியொன்றுக்கு ஆதரவளிக்கும் வகையில் தற்போதைய தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை தொடர்ந்தும் பேணப்படவுள்ளது- என்றுள்ளது. (எ-4)



# நெதர்லாந்துக் குழு இலங்கைக்கு வருகை

கொழும்பு, மே 24
நெதர்லாந்திலிருந்து விசேட குழுவொன்று இலங்கைக்கு வருகை தந்துள்ளது.

கொழும்பு துறைமுகத்துக்கு உட்பட்ட கடற்பரப்பில் நங்கூரமிடப்பட்டிருந்த நிலையில் தீப்பரவல் ஏற்பட்டுள்ள எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலின் பாதிப்புகள் தொடர்பில் ஆராய்வதற்காக இந்தக் குழு வருகை தந்துள்ளது.

அதேவேளை கப்பலின் தீயணைப்புப் பணிக்காக, அந்தக் கப்பலின் உரிமையாளருக்குச் சொந்தமான இழுவைப் படகொன்றும் அந்தப் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அத்துடன் தீப்பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக கடற்படைக்குச் சொந்தமான படகொன்றும், இலங்கை துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான 3 இழுவை படகுகளும் அனுப்பப்பட்டுள்ளன.

குறித்த கப்பல் கொழும்பு துறைமுகக் கடற்பரப்பில் கடந்த 19ஆம் திகதி நங்கூரமிடப்பட்டது. கப்பலில் ஆயிரத்து 486 கொள்கலன்கள் உள்ளன. அத்துடன் 25 மெற்றிக் தொன் நைட்ரிக் அமிலம் உள்ளிட்ட இரசாயனங்களும் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# தேயிலை மலையிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு

கம்பளை,மே 24
கம்பளை, புபுரஸ்ஸ பொலிஸ் பிரி வுக்குட்பட்ட முல்கம பகுதியில் உள்ள தேயிலை மலையிலிருந்து பெண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் யாரென அடையாளம் காணப்படாத நிலையில், அவர் சுமார் 45 வயது மதிக்கதக்கவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்ட பின்னர் இவர் தேயிலை மலைக்குள் வீசப்பட்டாரா அல்லது எவ்வாறு உயிரிழந்துள்ளார் என்பது தொடர்பில் புபுரஸ்ஸ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-இ)




# சைனோ.ஃ.போர்ம் தடுப்பூசிகள் தயார்

கொழும்பு,மே 24
இலங்கைக்கு சைனோஃபோர்ம் தடுப்பூசிகளை விரைந்து அனுப்புவதற்கான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

தேவையான தடுப்பூசிகள், சீன சுங்கப்பிரிவில் சுகாதாரப் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட தடுப்பூசிகள் விரைவில் இலங்கைக்குக் கிடைக்கும். இலங்கைக்கு 5 லட்சம் தடுப்பூசிகளை விரைவாக வழங்குவதற்காக, 24 மணித்தியால உற்பத்திச் சேவைகள் இடம்பெற்றன என்றும் தூதரகம் தெரிவித்துள்ளது. (4)

# தனிமைப்படுத்தலை மீறிய அமெரிக்கப் பிரஜை கைது

கொழும்பு,மே 24
தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் 31 வயதுடைய அமெரிக்க பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொத்துவில் பகுதியில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த நிலையில் பொலிஸாரால் இவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சியாக தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறி வந்தார் எனவும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளார்.

சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (ஐ-இ)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நேரடி விசாரணைகள் நிறுத்தம்

கொழும்பு, மே 24
மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு, நேரடியாக அழைத்து நடத்தப்படும் விசாரணைகள் மற்றும் பொதுமக்கள் தினம் ஆகியவை உட்பட தனிப்பட்ட சந்திப்புக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. எனினும் மக்கள் சகல முறைப்பாடுகளையும் தொலைநகல் இலக்கம் அல்லது மின்னஞ்சல் மற்றும் தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக நாட்டிலுள்ள சுகாதார வழிமுறைகளைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய கொழும்பிலுள்ள பிரதான காரியாலயம், அநுராதபுரம் , அம்பாறை, மட்டக்களப்பு, பதுளை, கண்டி, கல்முனை, யாழ்ப்பாணம், மாத்தறை, வவுனியா மற்றும் திருகோணமலை ஆகிய காரியாலயங்களுக்கு முறைப்பாடுகளை அனுப்பலாம் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது .(எ-4)

# கொரோனா தொடர்பில் உலக நாடுகளின் அறிக்கை உண்மையெனக் கூறமுடியாது

## சந்தேகம் வெளியிட்டது சுகாதார ஸ்தாபனம்

கொழும்பு, மே 24
உலக நாடுகள் கொரோனாத் தொற்றுடன் போராடி வரும் நிலையில், தொற்றாளர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆகியவை தொடர்பில் வெளியிடும் விவரங்கள் துல்லியமானவை என்று எம்மால் கூற முடியாது. உத்தியோகபூர்வ தகவல்களை விடவும் இரண்டு அல்லது மூன்று மடங்கு எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம். இவ்வாறு உலக சுகாதார ஸ்தாபனம் சந்தேகம் வெளியிட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தால் வருடாந்த புள்ளி விவர அறிக்கை வெளியிடப்படும். கான அறிக்கை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வெளி யிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில்,

கடந்த 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியளவில் உலகளாவிய ரீதியில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1.8 மில்லியன் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

எனினும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட எண்ணிக்கையை விடவும் 1.2 மில்லியன் பேர் அதிகமாக. அதாவது 3 மில்லியன் பேர் உயிரிழந்திருக்கலாம். ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழக படையில் கடந்த வருட இறுதியில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 3.4 மில்லியனாக அதிகரித்துள்ளது. எனினும் அந்த எண்ணிக்கை மிகத் துல்லியமானது என்று கூறமுடியாது.

கடந்த 2019 ஆம் ஆண்டின் பின்னரைப் பகுதியில்சீனாவில்கண்டறியப்பட்டகொரோனாத் தொற்றால் அந்த நாட்டில் ஒரு லட்சத்து 2 ஆயிரத்து 822 பேர் பாதிக்கப்பட்டனர். 4 ஆயிரத்து 846 பேர் உயிரிழந்தனர் என்று பதிவாகியுள்ளது. உண்மையில் அந்த எண்ணிக்கை பெருமளவுக்குக் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளதாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## துறைமுக சட்ட வரைவு வாக்குகளில் குழப்பம்

கொழும்பு.மே 24
கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக் குழு சட்ட வரைவின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக் கெடுப்பின் எண்ணிக்கையில் மாறுபாடு உள்ளது என்று அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித் துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
இந்தச் சட்ட வரைவுக்கு ஆதரவாக மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் கிடைத்திருந்த போதும், கணக்கெடுப்பின்போது இடம்பெற்ற தவறால் ஆதர வாக 148 வாக்குகள் கிடைத்தன என்று அறிவிக்கப் பட்டது. அமைச்சர் அலிசப்ரி மற்றும் ஜெயரத்ன ஹேரத் ஆகியோர் வாக்களித்த போதிலும், அந்த வாக்குகள் எண்ணிக்கையில் சேர்க்கப்படாமை பின் னரே அறியவந்தது. அதற்கமைவாக ஆதரவாக 150 வாக்குகள் கிடைக்கப் பெற்றன.
வாக்குகளை எண்ணுவதில் இது போன்ற தவறு ஒரு தீவிரமான விடயம். இது எவ்வாறு நடந்தது என்பதைக் கண்டுபிடிப்பது அவசியம்- என்றார். (எ-4)

# வாக்களிப்பில் குளறுபடியா விசாரணை ஆரம்பம்!

**கொழும்பு, மே 24**
**கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைவு மீதான வாக்குகளில் குளறுபடிகள் இடம் பெற்றுள்ளன என்ற குற்றச்சாட்டுத் தொடர்பில் இரு வேறு விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்துள்ளார்.**



இந்தச் சட்ட வரைவின் இரண்டா வது வாசிப்பு மீதான வாக்கெடுப் பின் போது, மூன்றிலிரண்டு பெரும் பான்மை, அரசுக்குக் கிடைத்தது. எனினும், வாக்குகள் சரியாக எண ணப்படவில்லை. அது தொடர்பில் முறைபாடு செய்யப்படும் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது. ஆளும் தரப் பைச் சேர்ந்த அலி சப்ரி, ஜயரத்ன ஹேரத் ஆகிய இருவரும் சட்ட வரை வுக்கு ஆதரவாக வாக்களித்தனர். எனினும், அவ்விருவரின் வாக்குக ளும் எண்ணப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (எ-4)

கொரோனா பரவலுக்கு இடமளித்தார் என

## கொக்கலை ஆடைத் தொழிற்சாலை மேற்பார்வையாளருக்கு மறியல்

கொழும்பு, மே 24
கொரோனா தனிமைப்படுத்தல் விதிகளைப் பின்பற்றாமல் செயற்பட்டார் எனத் தெரிவித்து ஆடைத் தொழிற்சாலை யின் மேற்பார்வையாளர் ஒருவர் விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளார். கொக்கலையிலுள்ள சுதந்திர வர்த்தக வலய ஆடைத் தொழிற்சாலையின் மேற்பார்வையாளரை எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு காலி மேலதிக நீதிவான் பவித்ரா சஞ்சீவனி பத்திரன உத்தரவிட்டார்.
ஆடைத் தொழிற்சாலையில் 283 பேருக்கு தொற்று உறு திப்படுத்தப்பட்டது. அவர்களின் முதல் நிலை தொற்றாளர் கள் 733 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர். ஆனால், தனி மைப்படுதல் தொடர்பில் வழங்கிய அறிவுறுத்தல்களைப் பின்பற்றாது பணியாளர்களை மேற்பார்வையாளர் செயற் படுத்தியுள்ளார். கொரோனா பரவலுக்கு காரணம் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு அவர் கைதுசெய்யப்பட்டி ருந்தார். (ஒ.இ)

## சுகாதார விதிகளை பின்பற்றி குருதிக்கொடை செய்யலாம்

*தேசிய குருதி பரிமாற்று சேவை அறிவிப்பு*

கொழும்பு,மே 24
குருதிக்கொடையாளர்கள் நாளாந்தம் காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரையில் குருதி வங்கிகளில் குருதிகளை வழங்க முடியும் என்று தேசிய குருதி பரிமாற்று சேவை அறி வித்துள்ளது.நாட்டில் அதிகரித்துள்ள கொரோ னாத் தொற்றுக் காரணமாக நடமாடும் குருதி முகாம்கள் நடத்தப்படாமையால் குருதிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.
இந்த நிலையில் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றி கொடையாளர்கள் குருதிக்கொடை செய்ய முடியும். அத்துடன் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி இதற்கான நேரத்தை ஒதுக்கிக் கொள்ள முடியும்.
எனவே, குருதிக் கொடையாளிகள் இது தொடர் பில் தேவையற்ற அச்சம்கொள்ளத் தேவை யில்லை என்று தேசிய குருதி பரிமாற்று சேவை அறிவித்துள்ளது. (ஐ-இ)

## பிளாஸ்டிக் போத்தல்களுக்கு பணத்தை மீளளிக்கும் திட்டம்

*அரசு பரிசீலனை*


கொழும்பு, மே 24
கண்ணாடிப் போத்தல்களுக்கு பணத்தை அறவிடு வதைப்போல பிளாஸ்டிக் போத்தல்களுக்கும் கட்ட ணத்தை அறவிட்டு அதனைத் திருப்பி ஒப்படைக்கும் போது பணத்தை வழங்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் அரசு ஆராய்ந்து வருகின்றது என சுற்றாடல் அமைச்சின் செயலர் மருத்துவர் அனில் ஜெயசிங்க தெரிவித்தார்.
சுற்றாடல் அமைச்சு சட்டத் திருத்தத்தின் ஊடாக உற் பத்தியாளர்களின் பொறுப்பு என்ற விடயதானம் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் இதனைச் செயற் படுத்த அரசு ஆலோசித்து வருகின்றது.
'குறைத்தல், மறுபயன்பாடு மற்றும் மீள்சுழற்சி ஆகிய கொள்கைகளைக் கருத்தில் கொண்டு இந்தத் திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பில் ஆராய்கின் றோம். இலங்கையில் பிளாஸ்டிக் பொருள்களை மீள்சுழற்சி செய்வதற்கான வசதிகளுடன் சேகரிப்பா ளர்கள் மற்றும் மீள்சுழற்சி செய்பவர்கள் உள்ளனர். ஆனாலும் சேகரிப்பு பொறிமுறை சரியான முறை யில் நடைபெறவில்லை. மீள்சுழற்சி செய்யக் கூடிய தாக சேகரிக்கப்பட்ட பிளாஸ்டிக்கில் 4 சதவீதமே மீள் சுழற்சி செய்யப்படுகின்றது' என்று அனில் ஜெயசிங்க சுட்டிக்காட்டினார். 'ஒரு தடவை மாத்திரமே பயன்ப டுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருள்களால் சுற்றுச்சூழ லுக்கு ஏற்படும் ஆபத்துத் தொடர்பில் பெரும்பாலான உற்பத்தியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் கவ லைப்படுகின்றனரா எனத் தெரியவில்லை' என்று அனில் ஜெயசிங்க குறிப்பிட்டார். (ஒ.5,இ)

## மூச்சு விடச் சிரமப்பட்டு உயிரிழந்த சிறுமிக்கு கொரோனா இல்லை

சாவகச்சேரி மே. 24
மூச்சு விடுவதற்கு சிரமப்பட்ட நிலையில் உயிரிழந்த ஆறு வயதுச் சிறுமிக்கு கொரோனாத் தொற்று ஏற் படவில்லை என அறிவிக்கப்பட்டதையடுத்து சடலம் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது.
கைதடியைச் சேர்ந்த 6 வயதுச் சிறுமி ஒருவர் மூச்சு விடுவதில் சிரமப்பட்ட நிலையில், சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டு சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார். சிறுமியிடம் இருந்து பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு மாதிரிகள் பெறப் பட்டன. சிறுமி கொரோனாத் தொற்றால் உயிரிழக்க வில்லை என்று தெரியவந்ததை அடுத்து சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-ப.9)

## மரண அறிவித்தல்

தோற்றம்
24
02
1959



மறைவு
23
05
2021

### ஞானரத்தினம் பரமேஸ்வரன்

சங்கானையைப் பிறப்பிடமாகவும் சுவிற்சர்லாந்தை வதி விடமாகவும் கொண்ட ஞானரத்தினம் பரமேஸ்வரன் நேற்று (23.05.2021) அகால மரணமடைந்துவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற ஞானரத்தினம், நாகம்மா தம்பதி யரின் அன்பு மகனும், தேவராணி, கனகலிங்கம், கிருஸ்ணவேணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சியாமளாதேவின் பாசமிகு கணவரும், சாமினியின் அன்புத் தந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிற்சர்லாந்தில் இடம்பெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
**தகவல்:**

## தற்காலிக முடக்கம் நீக்கப்பட்டதும் ரஷ்ய சுற்றுலா பயணிகள் வருகை

கொழும்பு, மே 24
எதிர்வரும் 31ஆம் திகதியின் பின்னர் விமான சேவைகள் ஆரம்பமாகியதும் ரஷ்யாவிலி ருந்து ஒரு தொகுதி சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வரு

விக்கப்படுகின்றது.
'பயோ பபுள் பாதுகாப்பு' திட்டத்தின் கீழ் இவர்கள் இலங்கைக்கு அழைத்து வரப்படுவார்கள் என்று இலங்கை சுற்றுலா அதி கார சபை தெரிவித்துள்ளது.

தல்களைப் பின்பற்றி தயாரிக் கப்பட்ட 'பயோ பபுள் பாது காப்பு' திட்டத்தில் ரஷ்யப் பய ணிகள் அழைத்து வரப்படு வார்கள் என்பதை சுற்றுலா அதிகார சபை உறுதிப்படுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org